வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 20.01.2024 சனிக்கிழமை | இதழ் : 20 | பக்கங்கள் : 12




# இலங்கை பொருளாதார மீட்சி இன்னும் குறைந்த மட்டத்தில்!

## சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜனவரி 20

**இலங்கையின் பொருளாதாரம் ஸ்திரத்தன்மையுடன் காணப்பட்டாலும் பொருளாதாரத்தின் மீட்சி என்பது குறைந்த மட்டத்திலேயே காணப்படுவதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.**

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இலங்கைக்கு மேற்கொண்டிருந்த 9 நாள் பயணம் நேற்றுடன் நிறைவடைகின்றது.

இந்நிலையில் நேற்று பிற்பகல் இலங்கை மத்திய வங்கியில் விசேட ஊடக சந்திப்பொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைத் தூதுக்குழுவின் தலைவர் பீட்டர் ப்ரூவர்,

இலங்கை அதிகாரிகளால் நடைமுறைப்படுத்தப் பட்ட பொருளாதார சீர்திருத்த வேலைத்திட்டங்கள் நம்பிக்கை அளிக்கின்றன.

எனினும் இந்தச் சூழலில், சீர்திருத்த வேகத்தை நிலைநிறுத்துவது மற்றும் அனைத்து திட்ட உறுதிப்பாடுகளையும் சரியான நேரத்தில் செயல்படுத்துவதை உறுதி செய்வது அவசியம்.

11



# சுதந்திர பலஸ்தீன அரசு நிறுவப்படுவது அவசியம்!

### அணிசேரா நாடுகளின் உச்சிமாநாட்டில் ஜனாதிபதி கோரிக்கை

கம்பாலா, ஜன. 20

மேற்குக்கரை காசா மற்றும் கிழக்கு ஜெருசலேம் ஆகிய பகுதிகளை பலஸ்தீனத்தின் ஒரு பகுதியாக அங்கீகரிப்பதன் முக்கியத்துவத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

காசாவின் இன அமைப்பில் எந்த மாற்றமும் இருக்கக் கூடாது. ஐந்து ஆண்டுகளுக்குள் பலஸ்தீன அரசு நிறு வப்பட வேண்டும் என்றும் அவர்

11

# கோட்டாவின் ஆட்சியை விட ரணிலின் ஆட்சி மோசமானது!

### கஜேந்திரகுமார் எம்.பி குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, ஜன. 20

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சி கோட்டாபயவின் ஆட்சியை விட மோசமாக உள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

மாவீரர் தின வாரத்தில் கைதான அரசியல்

11

# வடக்கில் அதிகரிக்கும் டெங்கு நோயாளர்கள்!

### யாழ்.போதனா வைத்தியசாலையில் இரண்டு டெங்கு மரணங்கள் பதிவு

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இரண்டு டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன.

உயிரிழந்தவர்கள் யாழ்ப்பாணம் அரியாலை பகுதி மற்றும் முல்லைத்தீவு மல்லாவி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

அரியாலை பகுதியை சேர்ந்த 31 வயதுடைய

11



# 'ஒரே சீனா' கொள்கையை இலங்கை ஆதரிக்கின்றது!

### தூதுவரிடம் உறுதியளித்த சபாநாயகர்

கொழும்பு, ஜன. 20

இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை நேற்று பாராளுமன்றத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

சீன மக்கள் குடியரசின் தேசிய மக்கள் காங்கிரஸின் நிலைக்குழுவின் தலைவர் (சீன பாராளுமன்ற சபாநாயகர்) ஸாவோ லெஜியின் புது வருட வாழ்த்துச் செய்தியை இதன்போது

11

# இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய குழுக் கூட்டம் இரத்து!

யாழ்ப்பாணம், ஜன. 20

இலங்கை தமிழ் அரசு கட்சியின் மத்தியகுழு கூட்டம் இரத்து செய்யப்பட்டுள்ளது.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் பொதுக்குழு கூட்டம் நாளை திருகோணமலையில் நடைபெறும். காலை 10 மணிக்கு பொதுக்குழு உறுப்பினர்கள் கூடி, புதிய தலைவரை தெரிவு செய்வார்கள்.

இதற்கு முன்னதாக, இன்று மாலை கட்சியின்

11



# முல்லைத்தீவில் ஒதுங்கிய இந்திய மீனவரின் சடலம்!

### மேலதிக விசாரணைகள் ஆரம்பம்

முல்லைத்தீவு, ஜன. 20

முல்லைத்தீவில் இந்திய மீனவரின் சடலம் ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

முள்ளிவாய்க்கால் பகுதியில் உள்ள இராணுவ முகாம் அமைந்துள்ள பகுதி கடற்கரையிலேயே இந்த சடலம் கரை ஒதுங்கி உள்ளது.

11

# இந்தியாவில் வாழும் இலங்கை அகதிகளுக்கு சர்வதேச அங்கீகாரம் பெற்ற கடவுச்சீட்டுகள்

### தமிழகத்தில் நேற்று வழங்கப்பட்டது

சென்னை, ஜன. 20

நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழகத்தில் தஞ்சம் புகுந்து அகதிவாழ்க்கை வாழ்ந்துவரும் இலங்கை வடக்கு - கிழக்கைச் சேர்ந்த அகதிகளுக்கு, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வழிகாட்டுதலின்கீழ் சர்வதேச கடவுச்சீட்டு நேற்று சென்னையில் வழங்கி வைக்கப்பட்டதாக

11




# நாடு முழுவதும் எதிர்ப்பு பேரணி

### ஐ.ம.ச. திட்டம்

கொழும்பு, ஜன. 20

நாடு முழுவதும் அரசாங்கத்துக்கு எதிரான பேரணிகளை நடத்துவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராகி வருவதுடன், எதிர்வரும் 30ஆம் திகதி இதன் முதலாவது பேரணியை நடத்த தீர்மானித்துள்ளது.

வற்வரி

11

# 61 எரிபொருள் குதங்கள் 50 வருடக் குத்தகைக்கு!

கொழும்பு, ஜன. 20

திருகோணமலை சீனன்குடா துறைமுக பகுதியில் உள்ள 99 எரிபொருள் குதங்களில் 61 குதங்கள் 50 வருடகாலத்திற்கு டிரிங்கோ பெற்றோலியம் டெர்மினல் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு

11

## இப்படியும் நடக்கிறது

அவர் ஓர் ஊர்க்குருவியின் தீவிர வாசகர். அடிக்கடி ஊர்க்குருவியின் கருத்தை விமர்சித்து தனது கருத்தை எழுதுவார்.

கடைசியில் துணிவிருந்தால், தனது இந்தக் கருத்தையும் பிரசுரியுங்கள் பார்க்கலாம் என்றுதான் முடிப்பார். ஆனால் நேற்று அவரிடமிருந்து வந்த ஒரு கடிதத்தில் அப்படியொரு கோரிக்கையை காணவில்லை.

இருந்தாலும் அதனை பிரசுரிக்காமல் அவருக்கு பதில் எழுதுவது சரியாக இருக்காது என்பதால் முதலில் அவரது கருத்தை அப்படியே தருகின்றேன்:

"பொதுவாக தங்கள் ஆசிரியர் தலையங்கம் அறிவுபூர்வமாகவும் சிந்திக்க தூண்டுவதாகவும் இருக்கும். ஆனால் இன்றையதோ தலைகீழாக உள்ளது. இலங்கையை அமெரிக்க கூட்டுக் கடல் கண்காணிப்பில் ஈடுபடுவதை சுமந்திரன் கண்டித்தமையை நீங்கள் கேள்விக்கு உள்ளாக்கி, ஏன் சஜித்தின் பலஸ்தீன ஆதரவை கண்டிக்கவில்லை என்று. பலஸ்தீனியர்கள் நம்மைப் போலவே 75 ஆண்டுகளாக அடக்கி ஒடுக்கப்பட்ட இனம். அவர்களுக்கு ஆதரவாக குரல் கொடுப்பதுதான் சரி (ஹமாஸிற்கல்ல). ஆகவே தங்களது முட்டையில் மயிர் பிடுங்க நினைக்கும் தந்திரம் புரிகிறது ஏனெனில் அறிக்கை விட்டவர்தான் வேண்டாதவர் ஆயிற்றே. மேலும் தங்கள் ரணில் சார்பு, டலஸ் உடன் அவர் போட்டி போட்டபோது நன்கு வெளிப்பட்டது.

அந்த நரி இந்த இரண்டு வருடத்தில் சொன்னது ஏதாவது செய்ததா? மேலும் ஊர்க்குருவி உட்பட பலர் தமிழ் தேசியவாதி ஒருவர்தான் தமிழரசு கட்சியின் தலைவராக வரவேண்டும் என்று வரிந்து கட்டிக் கொண்டு எழுதுகிறார்கள். தமிழ் தேசியம், சமஷ்டி, சுயநிர்ணய உரிமை பற்றி வாய்கிழிய பேசி யுத்தம் முடிவடைந்து பதினைந்து ஆண்டாக ஏதாவது கிழித்தார்களா?. இனியாவது சாத்தியமான இலக்கை அடைந்து மொழியையும் நிலத்தையும் காப்பாற்றி அபிவிருத்தி திட்டங்கள் பல நடைமுறைப்படுத்தி மக்களுக்கு சற்றே நன்மைகளை செய்ய நினைக்காமல் என் தலைவன் பிரபாகரன் என்று மட்டும் கோஷமும் வெளிவேஷமும் போடுபவர்கள் தலைமைக்கு வந்தால் மிச்சம் மீதி உள்ளதும் போய்விடும். அடுத்த பத்து வருடங்களில் பாதிப்பேர் வெளிநாட்டுக்கு செல்ல மீதி இடங்களை சிங்கள முஸ்லிம் மக்கள் நிரப்புவர். அப்புறம் தாயகமாவது மண்ணாங்கட்டியாவது.

புரிந்தால் சரி. ஆனால் இங்கே புரியாத மாதிரி நடிக்கும் காரியவாதிகளே அதிகம்."

மேலே இருப்பதுதான் என். விஜேன் என்ற அந்த வாசகரின் கவலை.

முதலில் ஆசிரியரின் அந்தக் கருத்துக்கு ஊர்க்குருவி பதில்சொல்வது அழகாக இருக்காது என்பதால் அதனைத் தவிர்த்துக்கொள்கின்றேன்.

ஆனால் அவரது கவலை எல்லாம் இந்த ஊர்க்குருவி, ரணில் ஆதரவாளர் என்றும், ஆனாலும் ரணில் இந்த இரண்டு ஆண்டுகளில் சொன்னது ஏதாவது செய்திருக்கின்றதா? என்றும் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

மேலே ஒரு கட்டத்தில், சுமந்திரனை எங்களுக்கு வேண்டாதவர் என்றும் தானே முடிவுசெய்துகொள்கின்றார். சுமந்திரனிடம் உள்ள பல திறமைகளை நாங்கள் எப்போதும், குறைத்து மதிப்பிட்டதில்லை. அதற்காக அவர் ஒருவராலேயே எல்லாம் சாத்தியமாகும் என்றும் நம்புபவர்கள் அல்ல. உலகின் முதல்தர பல்கலைக்கழகமான ஹவார்ட் பல்கலைக்கழக பட்டதாரியான கலாநிதி நீலன் திருச்செல்வம் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்தபோது, தன்னிலும் கல்வித் தகைமையில் குறைந்த தலைவர்களின் கீழ்தான் பணியாற்றினார். அதுவே ஒரு தலைவனுக்கு உரிய பண்பு என்று நம்புபவர்கள் நாங்கள்.

அந்த வாசகர் இரண்டு வருடங்களில் ரணில் என்ன செய்தார் என்று இந்த ஊர்க்குருவியிடம் கேட்பதால், பதில் சொல்லவேண்டியிருக்கின்றது, நல்லாட்சி அரசில் நமது தலைவர்கள் ஐந்து ஆண்டுகள் பொறுத்திருந்தது போல நாங்கள் பொறுத்திருக்கக்கூடாதா?

அடுத்து அவர் குறை, தமிழ் தேசியவாதி ஒருவர்தான் தமிழ் அரசுக்கு தலைவராகவேண்டும் என்று எழுதுகின்றோமாம். அதன் மூலம் இதுவரை எதைக்கிழித்தோம். இனியாவது சாத்தியமான இலக்கை அடைந்து அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்தி மக்களுக்கு சற்றே நின்மதியை ஏற்படுத்துமாறு கேட்கிறார்.

அவர் சொல்வது எமக்கு தெளிவாக புரிகின்றது. பேசாமல், டக்ளஸ் தேவானந்தாவை தமிழரசு கட்சியின் தலைவராக்கிவிட வேண்டும் என்கிறாரோ தெரியவில்லை. அதற்கும் டக்ளஸ் விருப்பம் தெரிவிப்பாரா என்பது தெரியவில்லை.

தமிழ் அரசுக்கு யார் தலைவராக வேண்டும் என்பதை அந்தக் கட்சியினரே முடிவெடுக்கட்டும். அவர்கள் என்ன முடிவை எடுக்கிறார்கள் என்பதும் நாளை தெரிந்துவிடும்தானே.!

**- ஊர்க்குருவி.**

# இந்த நேரத்தில் பிரதமர் பதவியை மாற்றவேண்டிய அவசியம் இல்லை

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறுகிறார்

கொழும்பு, ஜன. 20

தற்போதைக்கு பிரதமர் பதவியை மாற்ற வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு இல்லை என அரசாங்க கட்சியின் பிரதான அமைப்பாளரும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பதவிகளை மாற்றுவதை விட பொருளாதாரத்தை வலுப்படுத்தி நாட்டை ஸ்திரப்படுத்துவதே தற்போதைய தேவை என அமைச்சர் வலியுறுத்துகிறார்.

அதற்காக அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கம்பஹா மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற கம்பஹா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது:

கோவிட் தொற்றுநோய் மற்றும் போராட்டம் காரணமாக, எங்களால் அபிவிருத்தித் திட்டத்தை செயல்படுத்த முடியவில்லை. ஆனால் தற்போதைய ஜனாதிபதி வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கும் போது அபிவிருத்தியை கிராமத்திற்கு கொண்டு செல்லும்படி கூறினார். பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கள் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன்படி, ஒவ்வொரு கிராமிய சேவைப் பிரிவுகளும் 3-4 மில்லியன் ரூபாவை அபிவிருத்தித் திட்டங்களுக்காகப் பெறுகின்றன.



அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் இவ்வருடத்தில் நடைபெறும். ஆனால் ஜனாதிபதியால் பொதுத் தேர்தலையும் நடத்த முடியும். அதற்கு நிறைய காலம் உள்ளது, ஆனால் நாங்கள் அபிவிருத்தித் திட்டத்தில் கவனம் செலுத்துகிறோம்.

இப்போது பொருளாதாரத்தை சரி செய்து நாட்டை ஸ்திரப்படுத்தக் கூடிய ஒரு தலைவரை கொண்டு வர வேண்டும். திருடர்களை பிடிப்பதாக வாய்ப் பேச்சுபேசும் தலைவர்களால் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள முடியாது. அறிவார்ந்த மக்கள் இந்நிலையைப் புரிந்து கொண்டுள்ளனர்.

தினேஷ் குணவர்தன பிரதமராக சிறப்பாக பணியாற்றி வருகிறார். எனவே, அந்த நிலையை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை. நாம் இப்போது பொருளாதாரத்தை வலுப்படுத்தப் பார்க்கிறோம். இது ஒரு தேசிய பிரச்சினை. அதனால், தேவையில்லாத பிரச்னையில் கவனம் செலுத்த வேண்டியதில்லை - என்றார். (அ)

# நிதி மோசடியில் ஈடுபடும் நபர்களின் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்படும்

கொழும்பு, ஜன. 20

நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் நிதி மோசடியானது மிக மோசமான பாராதூரமான நிலைமையில் இருப்பதால், மக்களிடம் நிதி மோசடியில் ஈடுபடும் நபர்களின் புகைப்படங்கள் விமான நிலையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள விசேட கமெரா கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்டு காட்சிப்படுத்தப்படும் என பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

மத்திய வகுப்பு மக்களை ஏமாற்றி பணத்தை சேகரிக்கும் சிறிய நிதி நிறுவனங்களின் நபர்கள் பெருந்தொகை பணத்தை சேகரித்த பின்னர் வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்கின்றனர்.

அவர்கள் நாட்டில் இருந்து தப்பியோடுவதை தடுக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

சிறிய நிதி நிறுவனங்கள், வங்கிகள்,கடன் வழங்கும் சங்கங்கள் பெரிய அளவில் பணத்தைச் சேகரித்த பின்னர், வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்லும் நிலைமை காணப்படுகிறது.

இதனடிப்படையில் அடுத்த ஒரு மாத காலத்திற்குள் பொலிஸாருக்கு கிடைத்துள்ள முறைப்பாடுகளுக்கு அமைய கிடைத்துள்ள சம்பந்தப்பட்ட நபர்களின் புகைப்படங்கள் விபரங்களை பொலிஸ் தரவு கட்டமைப்புக்குள் உள்ளடக்கப்படும் எனவும் தேசபந்து தென்னக்கோன் குறிப்பிட்டார். (அ)

# விஸாக்களை மறுசீரமைக்கும் இலங்கை

கொழும்பு, ஜன. 20

வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கையர்களுக்கான செயன்முறையை எளிதாக்கும் நோக்கில் இலங்கை தமது விஸா முறையில் விரிவான மறுசீரமைப்பை மேற்கொள்கிறது.

வெளிநாட்டு முதலீடுகள், நிகழ்நிலை பணியாளர்கள் மற்றும் சுற்றுலா பயணிகளை ஈர்ப்பதனை நோக்கமாகக் கொண்டு இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

விஸா நீடிப்பு சிக்கல்களை நீக்குதல் உள்ளிட்ட முக்கிய மேம்பாடுகளை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய வெளியிட்டுள்ளார்.

இதற்கமைய, பயணிகள் தமது தங்குமிடத்தை உள்ளடக்கிய வகையில் விசாவிற்கு விண்ணப்பிக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், 10 வருட முதலீட்டாளர் விஸாவும் அறிமுகப்படுத்தப்படும் என ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கையை நிரந்தர வதிவிடமாக மாற்ற விரும்புவோருக்கு நிரந்தர வதிவிட விஸா வழங்குவதற்கும் வழிவகுக்கப் பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

குறித்த மறுசீரமைப்பின் மூலம் இலங்கை வருடாந்தம் சுமார் 3 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதுடன், பொருளாதாரத்தை மேம்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது என குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்தார். (அ)

# உடுவிலில் திருட்டில் ஈடுபட்ட குற்றத்தில் இளைஞன் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 20

உடுவில் - மல்வம் பகுதியில் வீடுடைத்து நகை திருடிய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் உடுவில் - மல்வம் பகுதியில் வீடு ஒன்றினை உடைத்து திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு கிடைத்தது.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் மல்வம் பகுதியில் வசிக்கும் 20 வயதுடைய இளைஞர் ஒருவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞனிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் 5 1/2 பவுண் திருட்டு நகைகள் கைப்பற்றப்பட்டன.

இளைஞனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

Eelanadu
20.01.2024 சனிக்கிழமை
சோபகிருது வருடம், தை 06

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழரசு கட்சியின் எதிர்காலம்?

தமிழரசுக் கட்சி ஒரு பாரம்பரிய கட்சி. இடைநடுவில் காணாமல் போன அந்தக் கட்சிக்கு, விடுதலைப் புலிகள் இயக்கமே, உயிரளித்தது. இதற்கு ஒரு காரணமிருந்தது - அதாவது, தமிழரசு கட்சியின் வரலாற்று பின்புலமே அதற்கான காரணமாகும். தமிழ் தேசிய அரசியலிலிருந்து ஜி.ஜி.பொன்னம்பலம் விலகிச் சென்றுவிட்டார், தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு துரோகமிழைத்துவிட்டார் என்னும் குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே, எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தமிழரசு கட்சியை உருவாக்கினார்.

தமிழ் தேசிய அரசியலை முன்னெடுப்பதே தமிழரசு கட்சியின் பிரதான இலக்காக முன்வைக்கப்பட்டது. எனினும் ஒரு தனிக்கட்சியாக விடயங்களை முன்னெடுக்க முடியாது என்னும் அடிப்படையிலேயே, செல்வநாயகம் தமிழர் விடுதலைக் கூட்டணியை ஸ்தாபித்தார். முன்னர் துரோகமிழைத்ததாக கூறப்பட்ட பொன்னம்பலத்தையும் இணைத்தே விடுதலைக் கூட்டணி உருவாக்கப்பட்டது. தமிழரசுக் கட்சியின் நீட்சியே தமிழர் விடுதலைக் கூட்டணி எனினும் அதனை பயன்படுத்துவதில் குழப்பங்கள் ஏற்பட்ட போதுமே, தமிழரசு கட்சி மீளவும் அரசியல் அரங்கிற்கு வந்தது.

இங்கு கவனிக்க வேண்டிய ஒரு விடயம் உண்டு. ஒப்பீட்டடிப்படையில் சம்பந்தன், மாவை சேனாதிராசாவை விடவும் - விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு நெருக்கமானவராக தன்னை அடையாளப்படுத்தியிருந்தவர் குமார் பொன்னம்பலம் ஆவார். இறுதிக் காலத்தில் தான், அவர், அவ்வாறு செயல்பட்டார் என்றாலும் கூட, கொழும்பிலிருந்து கொண்டு, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக பேசினார். பின்னர் அவர் படுகொலை செய்யப்பட்டார். அந்த அடிப்படையில் நோக்கினால் விடுதலைப் புலிகள் அமைப்பு குமார் பொன்னம்பலத்தின் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் சின்னத்தையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்காக பயன்படுத்தியிருக்க வேண்டும்.

காங்கிரஸ் கட்சியினரிடமிருந்தும் அவ்வாறான கோரிக்கை முன்வைக்கப்பட்டது - ஆனால், விடுதலைப் புலிகளின் தலைமை அதனை மறுத்துவிட்டது. ஏன்? ஏனெனில் சைக்கிள் சின்னத்தின் கீழ், தமிழ் தேசிய அரசியலை முன்னெடுப்பதிலுள்ள நடைமுறைச் சிக்கல்களை கருத்தில் கொண்டே, புலிகள் அமைப்பு அவ்வாறானதொரு தீர்மானத்தை எடுத்திருந்தது. ஏனெனில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி எந்தக் காலத்திலும் தமிழ் தேசிய அரசியலின் முகமாக இருந்ததில்லை. இதனை உணர்ந்தே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் என்னும் பெயரில் மக்களிடம் செல்லாமல், தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்னும் பெயரில் மக்களிடம் செல்கின்றார். ஏனெனில் அவருக்கே தெரியும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் என்னும் பெயரில் தமிழ் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்ய முடியாது.

இதன் காரணமாகவே விடுதலைப் புலிகள் அமைப்பு ஜனநாயக அரசியலில் தமிழ்த் தேசியத்தை முன்னெடுப்பதற்காக, தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு, தமிழரசு கட்சியின் சின்னத்தை பயன்படுத்தினர். அந்த சின்னத்தை மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் பணியை அவர்களே செய்தனர். இந்தப் பின்புலத்தில்தான், 1994ஆம் ஆண்டிலிருந்து 2001 வரையான காலப்பகுதியில் தேர்தல்கள் மூலம் தெரிவாகாத இரா.சம்பந்தன் திருகோணமலையில் தெரிவானார்.

இவ்வாறான பின்னணியை கொண்டிருக்கும் கட்சிக்கான புதிய தலைவரை தெரியும் செய்யும் போட்டியே தற்போது இடம்பெறவுள்ளது. புதிய தலைவர் யார் என்பதை பொறுத்தே தமிழரசு கட்சியின் அடுத்த கட்ட அரசியல் முகம் தீர்மானிக்கப்படும். அவர் யாராக இருக்க வேண்டும் என்பதை அந்தக் கட்சியின் உறுப்பினர்களே தீர்மானிப்பர். ஆனால் அவர்களது தீர்மானம் தமிழரசு கட்சியின் எதிர்காலத்தை நிச்சயம் சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ தீர்மானிக்கும்.

# வாழ்வாதார உதவிப் பொருட்கள் வழங்கல்

*யாழ்ப்பாணம், ஜன. 20*

சமூக சேவைகள் அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் திணைக் களத்தின் ஒழுங்குபடுத்தலில் நேற்று வாழ்வாதார உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன.




வடமாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு உணவு வழங்கலும் விநியோகமும் தொழில் துறையும், தொழில் முனைவோர் மேம்பாட்டு மற்றும் வர்த்தக வணிக அமைச்சினால் குறித்த உதவி வழங்கப்பட்து.

முயற்சி உடையோர் மற்றும் சிறு கைத்தொழில் விவசாயம் உள்ளிட்ட பல்வேறு தொழில் முயற்சி உடையவர்களுக்கான வாழ்வாதார உதவிப் பொருட்கள் அமைச்சின் செயலாளர் வாகீசனால் வழங்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட பூநகரி, பல்லவராயன்கட்டு, பளை, தருமங்கேணி, வலைப்பாடு, நாச்சிக்குடா உள்ளிட்ட பகுதிகளில் உள்ள 11 பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு சுமார் 150000 ரூபா பெறுமதியான வாழ்வாதர உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

(அ-2)

# கஞ்சாவுடன் ஒருவர் நெடுந்தீவில் கைது!

*யாழ்ப்பாணம், ஜன. 20*

நெடுந்தீவு பகுதியில் கஞ்சாவுடன் சந்தேகபர் ஒருவர் நேற்று முன் தினம் வியாழக்கிழமை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது அவரிடம் இருந்து ஒரு கிலோ 50 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதாக நெடுந்தீவு பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேகநபர் நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ)

## விவசாயிகளுக்கான பயிற்சிப்பட்டறை

*வடமராட்சி, ஜன. 20*

எளிய முறையில் இயற்கை விவசாயம் என்ற தலைப்பில் வடமராட்சி விவசாயிகளுக்கான ஒரு நாள் பயிற்சிப்பட்டறை எதிர்வரும்21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கரவெட்டிப் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணிமுதல் மாலை 5 மணி வரை இடம்பெறும் இப்பயிற்சிப்பட்டறையில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விவசாய அறிஞர்களான இயற்கை வேளாண்மை விஞ்ஞானி பாமரன், இயற்கை வேளாண்மை பண்ணை ஆலோசகர் ராஜ கணேஷ் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொள்வார்கள்.

புதிய வெளிச்சம் நிறுவனத்தின் அனுசரணையுடன் வடமராட்சி அபிவிருத்தி

நிறுவனம் இப் பயிற்சிப் பட்டறைக்கு ஏற்பாடு செய்துள்ளது. (அ-2)

# சந்நிதியான் ஆச்சிரம உதவி வழங்கும் நிகழ்வு



*வடமராட்சி, ஜன.20*


வடமராட்சி தொண்டமனாறு செல்வ சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் வாராந்த நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை காலை 10:30 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் அதன் முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம்பெற்றது.

இதில் மகா பாரதம் தொடர் பான சொற்பொழிவினை ஆசிரியர் இரா செல்வடிவேல் நிகழ்த்தியதை தொடர்ந்து யாழ் இராமநாதன் மகளிர் கல்லூரி மாணவி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவி, அம்பன் அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை மாணவன், கரவெட்டி கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவன் ஆகியோருக்கு அவர்களது கல்விக்கான உதவியாக துவிச்சக்கர வண்டிகளும் வழங்கிவைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம கலை பண்பாட்டுப் பேரவை நிர்வாகிகள், உறுப்பினர்கள், ஆச்சிரம தொண்டர்கள், என பலரும் கலந்து கொண்டனர்.

(அ-2)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**ஜனவரி - 20 சனிக்கிழமை**
**சோபகிருது வருடம் - தை 06**
**நல்ல நேரம் : 07.30 - 09.00**
**ராகு காலம் : 09.00 - 10.30**
**திதி : தசமி**



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமையால் சோர்வாக காணப்படுவீர்கள் சில விஷயங்களுக்கு அனுபவ அறிவை பயன்படுத்துவது நல்லது. திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். மேலதிகாரியுடன் மோதல்கள் வந்து நீங்கும். நிதானம் தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் மனம் விட்டுப் பேசி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். உயர் அதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். உற்சாகமான நாள்.

**கடகம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தை விரிவுபடுத்த புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். புது வாய்ப்புகள் தேடி வரும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**சிம்மம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த ஒரு காரியத்தையும் இரண்டு மூன்று முறை போராடி முடிக்க வேண்டி வரும். விமர்சனங்கள் வந்து போகும். முன்கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

**துலாம்**
எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் எல்லோரும் மதிப்பார்கள். நன்மை கிட்டும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பயணங்களால் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். உங்கள் கை ஓங்கும். அமோகமான நாள்.

**தனுசு**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். புதுமை படைக்கும் நாள்.

**மகரம்**
கடந்த கால சுகமான அனுபவங்கள் எல்லாம் மனதில் நிழலாடும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் அமைதி நிலவும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

**கும்பம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். மனதிற்கு இதமான செய்தி வரும். வியாபாரம் செழிக்கும். சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். தைரியம் கூடும்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். நண்பர்களால் ஆதாயம் பெருகும். வியாபாரத்தில் புது தொடர்புகள் கிடைக்கும். உங்களுக்கு அங்கீகாரம் கிடைக்கும். திடீர் திருப்பங்கள் நாள்.

# ஈபிஎஸ் முன்னிலையில் அதிமுகவில் இணைந்தார் நடிகை காயத்ரி ரகுராம்

சென்னை, ஜன. 20

கடந்த ஆண்டு பாஜகவில் இருந்து விலகிய நடிகை காயத்ரி ரகுராம், எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் அதிமுகவில் இணைந்தார்.

நடிகையும், நடனக் கலைஞருமான காயத்ரி ரகுராம் பல ஆண்டுகளாக பாஜகவில் செயல்பட்டு வந்தவர். தமிழக பாஜகவில் வெளிநாடு மற்றும் பிறமாநில தமிழ் வளர்ச்சிப் பிரிவு தலைவராகவும் இருந்து வந்தார். இந்தச் சூழலில், கடந்த ஆண்டு ஜனவரியில், கனத்த இதயத்துடன் பாஜகவில் இருந்து விலகுவதாகவும், விசாரணைக்கு வாய்ப்பு கொடுக்காத, பெண்களுக்கு சம உரிமையும் மரியாதையும் கொடுக்காத காரணங்களுக்காக தமிழக பாஜகவில் இருந்து விலகுவதாகவும் அறிவித்திருந்தார்.



இதனைத் தொடர்ந்து, சமூக வலைதளங்களில் தமிழக பாஜகவையும், அக்கட்சியின்ம் மாநில தலைவர் அண்ணாமலையையும் விமர்சித்து வந்தார். இந்த நிலையில், நேற்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் தன்னை அக்கட்சியில் இணைத்துக் கொண்டுள்ளார். இதனை அதிமுக செய்தித் தொடர்பாளர் சிஆர்டி நிர்மல் குமார் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். (அ)

# மோடியின் வருகையால் பொலிஸ் கட்டுப்பாட்டில் ஸ்ரீரங்கம் கோயில்

சென்னை, ஜன. 20

பிரதமர் மோடி வருகையையொட்டி ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயில் முழுவதும் பொலிஸ் கட்டுப்பாட்டில் வந்துள்ளது. பாதுகாப்பு பணியில் சுமார் 3 ஆயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தமிழகத்துக்கு 3 நாள் பயணமாக வருகை தரும் பிரதமர் மோடி, பெங்களூருவில் இருந்து நேற்று மாலை 4.50 மணிக்கு சென்னை வந்தார். பின்னர் கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளை தொடங்கி வைத்த அவர், நேற்று இரவு ஆளுநர் மாளிகையில் தங்கினார். இன்று காலை 9.20 மணிக்கு சென்னையில் இருந்து விமானம் மூலம் புறப்பட்டு காலை 10.30 மணிக்கு திருச்சி விமான நிலையம் வந்தடைகிறார். அவரை மத்திய, மாநில அமைச்சர்கள், மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் வரவேற்கின்றனர்.

பின்னர், அங்கிருந்து அவர் ஹெலிகொப்டரில் ஸ்ரீரங்கம் செல்கிறார். இதற்காக ஸ்ரீரங்கம் யாத்ரி நிவாஸ் எதிரே ஹெலிகொப்டர் தளம் அமைக்கப்பட்டுள்ளது. பின்னர், அவர் அங்கிருந்து பஞ்சக்கரை சாலை வழியாக காரில் ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயிலுக்கு காலை 10.55 மணிக்கு சென்றடைகிறார். அங்கு சுமார் 2 மணி நேரம் தரிசனத்துக்கு பிறகு காரில் ஹெலிகாப்டர் தளத்துக்கு சென்று, பிற்பகல் 2.05 மணிக்கு ராமேசுவரம் சென்றடைகிறார்.

இதையொட்டி, திருச்சி மாநகர காவல் ஆணையர் என். காமினி தலைமையில் 3 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும், பிரதமரின் சிறப்பு பாதுகாப்பு குழுவினரும் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர். கோயில் வளாகம் முழுவதும் பொலிஸார் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது. நேற்று மாலை 6 மணி முதல் இன்று பிற்பகல் 2.30 மணி வரை கோயிலில் பக்தர்கள் தரிசனம் செய்ய அனுமதியில்லை என ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

# ஆற்காடு வீராசாமி மருத்துவமனையில்

சென்னை, ஜன. 20

திமுக முன்னாள் அமைச்சர் ஆற்காடு வீராசாமி உடல் நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திமுக முன்னாள் பொருளாளராகவும், முன்னாள் மின்துறை அமைச்சராகவும் இருந்தவர் ஆற்காடு வீராசாமி ( வயது-92). வயது முதிர்வு காரணமாக தீவிர அரசியலில் இருந்து விலகி ஓய்வில் இருந்து வருகிறார்.

இந்நிலையில், அவருக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டதைத் தொடர்ந்து வட பழனியில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு முட நீக்கியல் துறை மருத்துவர்கள் சிகிச்சை அளித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# தமிழ்நாட்டில் மின்வெட்டை தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## ராமதாஸ் வலியுறுத்தல்



சென்னை, ஜன. 20

2030 ஆம் ஆண்டுக்குள் 20,000 மெகாவாட் சூரிய ஒளி மின்திட்டங்கள், 15,000 மெகாவாட் நீரேற்று மின்திட்டங்கள் ஆகியவை செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்பை செயல்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் தமிழகத்தில் மின்வெட்டை நிரந்தரமாக தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்ட அறிக்கையில்

தமிழ்நாட்டில் ஜனவரி முதல் ஜூன் மாதம் வரையிலான காலத்தில் அதிக அளவாக 4000 மெகாவாட் வரை மின்சாரப் பற்றாக்குறை ஏற்படக்கூடும் என்று தென்மண்டல மின்பளு வழங்கும் மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்தப் பற்றாக் குறையை சமாளிக்க மின்னுற்பத்தித் திறனை அதிகரித்தல், மின்சாரத்தை வெளிச்சந்தையிலிருந்து வாங்குதல் உள்ளிட்ட நடவடிக்கைகளை மின்வாரியம் மேற்கொள்ள வேண்டும்-என்றுள்ளது. (அ)

# நாட்டில் தற்போது அதிகரித்து வரும் இன்புளுவென்சா, வைரஸ் காய்ச்சல்

## மக்கள் அவதானமாக இருக்க கோரிக்கை

கொழும்பு, ஜன. 20

**நாட்டில் தற்போது இன்புளுவென்சா மற்றும் அதனை ஒத்த வைரஸ் காய்ச்சல் அதிகம் பரவுகிறது.**

இதன் அறிகுறிகளாக காய்ச்சல், இருமல், தொண்டை புண், சளி அல்லது அடைப்பு, தசை அல்லது உடல் வலி, தலைவலி மற்றும் சோர்வு போன்றவைகள் ஏற்படலாம்.

இவ்வாறு அடையாளம் காணபட்டவர்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு வைரஸ் நோய்கள் தொடர்பான சுகாதார வைத்திய நிபுணர் வைத்தியர் ஜூட் ஜயமஹா பொதுமக்களை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்-

குறிப்பாக நவம்பர் முதல் பெப்ரவரி மாதம் வரையிலும் மற்றும் ஏப்ரல் முதல் ஜூலை மாதம் வரையிலும் இரண்டு காலக்கட்டங்களில் இன்புளுவென்சா வைரஸ் பரவும்.

கடந்த டிசெம்பர் மாதம் மற்றும் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் பரிசோதனைகளில் முன்னொருபோதும் இல்லாத அளவிற்கு 25 சதவீதம் பேருக்கு இன்புளுவென்சா வைரஸ் காய்ச்சல் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையில், கொழும்பு, ராகம, களுபோவில, நீர்கொழும்பு, லேடி ரிஜ்வே சிறுவர்களுக்கான வைத்தியசாலை மற்றும் அங்கொடை தொற்று நோய் தடுப்பு வைத்தியசாலை உள்ளிட்ட 20 வைத்தியசாலைகளில் இன்புளுவென்சா மற்றும் அதனை ஒத்த வைரஸ் காய்ச்சல் தொடர்பில் கண்காணிப்பை அதிகரிக்க சுகாதார அமைச்சின் செயலாளர் தேசிய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அதன்படி, நாளாந்தம் மாதிரிகள் தேசிய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அனுப்பப்படுகின்றன. தற்போது பரவும் முதன்மையான வைரஸ் வகை இன்புளுவென்சா ஏ என கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன், கொவிட்-19 வைரஸ் தொடர்பிலும் கண்காணிப்பை மேம்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 9 நாட்களில் 500 மாதிரிகளில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் 6 ஆறு பேருக்கு நோய் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது

கர்ப்பிணித் தாய்மார்கள், இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள், 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட நபர்கள் மற்றும் நாட்பட்ட நோய்கள் உள்ளவர்கள் இன்புளுவென்சா போன்ற நோய்களால் பாதிக்கப்படக் கூடியவர்களாவர்.

எனவே, இருமல் இருப்பவர்கள் மற்றவர்களுக்கு பரவுவதை தடுக்க முகக்கவசம் அணிய வேண்டும்-என்றார். (அ)

# சஜித் பிரேமதாஸ இல்லையேல் நான் அரசியலில் இருந்து ஓய்வு பெறுவேன்!

## கூறுகிறார் சமிந்த விஜேசிறி

கொழும்பு, ஜன. 20

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாஸ களமிறங்காவிட்டால் அரசியலில் இருந்தும் நான் ஓய்வுபெறுவேன்."

- இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்த ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி, கூட்டணியின் வேட்பாளராக சஜித் பிரேமதாசவே களமிறங்க வேண்டும். அவருக்கு ஆதரவாக நாம் செயற்படுவோம். சஜித் பிரேமதாச போட்டியிடாவிட்டால் அரசியலில் இருந்து நான் ஓய்வு பெறுவேன்.

அநுரகுமார திஸாநாயக்க அரசியலில் தூய்மையானவர் எனக் கூறப்படுமானால் அந்த கருத்தை ஏற்க முடியாது. அவர்களும் அரசுகளில் அங்கம் வகித்தவர்கள். ஜே.வி.பியினரால் 'பைல்'களை மாத்திரமே வெளிப்படுத்திகொண்டிருக்க முடியும்.

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்தமை கவலை இல்லை. நான் மகிழ்ச்சியாகவே இருக்கின்றேன் - என்றார். (அ)

# ரயில் சேவையில் பாதிப்பு!

கொழும்பு, ஜன. 20

பொல்கஹவெலயில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயிலில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக பிரதான ரயில் மார்க்கத்தில் நேற்று காலை முதல் தாமதம் ஏற்பட்டதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

பொல்கஹவெலயில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயில் ஒன்று அம்பேபுஸ்ஸ ரயில் நிலையத்திற்கு அருகில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக காரணமாக குறித்த மார்க்கத்தின் ரயில் சேவைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மின்சார சபை ஊழியர்கள் 15 பேர் பணி இடைநீக்கம்!

கொழும்பு, ஜன. 20

மின்சார சபையின் மறுசீரமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்த மின்சார ஊழியர்கள் சிலரின் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற போராட்டத்தின்போது பணகரும பீடத்தை மூடி மின் கட்டணம் செலுத்துவதற்கு இடையூறு விளைவித்த 15 பணம் பெறும் அலுவலர்கள் பணி இடைநீக்கம் செய்யப்பட்டதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

மின்சார சபையை தனியார்மயமாக்கப் போவதாக அண்மையில் அதன் தொழிற்சங்கங்கள் எதிர்ப்புப் பிரசாரத்தை முன்னெடுத்திருந்தன.

இதன்படி, மின்சார சபையின் நிர்வாகத்தால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களை மீறும் வகையில் சேவைகளுக்கு இடையூறு விளைவிக்கும் ஊழியர்களை பணி இடைநீக்கம் செய்து உரிய ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்குமாறு மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர இலங்கை மின்சார சபை நிர்வாகத்துக்கு பணிப்புரை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அரச ஊழியர்களுக்கு முதல் கட்டமாக ரூ.5000

கொழும்பு, ஜன. 20

2024 வரவு -செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு 10,000 ரூபா சம்பள உயர்வுக்கு முன்மொழியப்பட்டுள்ள நிலையில், முதல் கட்டமாக 5,000 ரூபா அதிகரிப்பு, ஜனவரி முதல் அமுலுக்கு வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முதல் கட்டமாக ஆசிரியர்களின் சம்பளத்திற்கான பணம் ஏற்கனவே திறைசேரிக்கு விடுவிக்கப்பட்டுள்ளது என அமைச்சர் குறிப்பிட்டார்.

அரச ஊழியர்கள் எதிர்நோக்கும் நிதி நெருக்கடி தொடர்பில் ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தி 1.4 மில்லியன் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க தீர்மானித்துள்ளார்.

இந்த சம்பள உயர்வு ஏப்ரல் மாதம் அமுல்படுத்தப்பட இருந்தது. ஜனாதிபதியின் பலமான கோரிக்கையை அடுத்து, அரசாங்கம் தனித்துவமான நாணய



முகாமைத்துவம் தொடர்பில் செயற்பட்டு வருகின்றது. இந்த சம்பள அதிகரிப்பின் ஒரு பகுதியை ஜனவரி மாதத்திலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.

கல்வித்துறைக்கு பணம் ஒதுக்கிய பின்னர் , பாதுகாப்பு, சுகாதாரம் போன்றவற்றுக்கு குறிப்பிட்ட உத்தரவின் கீழ் பணம் விடுவிக்கப்பட்டு, சுமார் 1.4 மில்லியன் அரச ஊழியர்களுக்கும் 10,000 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்கவுள்ளோம். சம்பள உயர்வில் 5,000 ரூபா சம்பளமாக அல்லது கொடுப்பனவாக வழங்கப்படும்-என்றார். (அ)

# நட்பாக பழகி மயக்க மருந்து கொடுத்து கொள்ளையடிக்கும் ஜோடி சிக்கியது!

கொழும்பு, ஜன. 20

நுவரெலியாவில் பொதுமக்களுடன் நட்புறவை ஏற்படுத்தி, பானத்தில் மயக்க மருந்து கலந்து கொடுத்து, அவர்களிடம் இருந்த பணம் மற்றும் தங்கநகைகள் போன்ற பெறுமதியான பொருட்களை கொள்ளையடித்துவிட்டு தப்பியோடிய தம்பதியரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தவலந்தன்ன மற்றும் வட்டவளை பிரதேசத்தில் வசிக்கும் பெண் ஒருவரும் ஆண் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இருவரும் 46 மற்றும் 39 வயதுடையவர்கள் எனவும், சந்தேக நபர்களான தம்பதியினர் நேற்று முன் தினம் நுவரெலியா நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அன்றைய தினம் இருவரையும் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்த நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி பண்டாரவளை தெமோதர பிரதேசத்தை சேர்ந்த பெண் ஒருவர் பண்டாரவளை நகருக்கு வந்தபோது சந்தேகநபர்களான தம்பதியினர் வந்து அந்த பெண்ணுடன் நட்புறவை ஏற்படுத்திக் கொண்டனர்.

சந்தேகநபர் தம்பதியினர், பெண் பொருளாதார நெருக்கடியில் இருப்பதை அடையாளம் கண்டு, குடும்பத்தை பொருளாதார நிலையில் இருந்து மீட்டெடுக்க உதவுவதாகக் கூறியது, அவருக்கு சில ஆயத்த ஆடைகளைக் கொடுத்ததுடன், அவர்களின் தொலைபேசி எண்களையும் கொடுத்தது.

இவ்வாறு வழங்கப்படும் ஆயத்த ஆடைகளை விற்பனை செய்த பின்னர் மீண்டும் அறிவிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




தொலைபேசியில் தொடர்பு கொண்டு, சில ஆயத்த ஆடைகள் விற்பனைக்கு இருப்பதாகவும், மீதி துணிகளுடன் நுவரெலியாவுக்கு வருமாறும், நிறைய துணிகளை விற்க தருவதாகவும் தம்பதியினர் தெரிவித்தனர்.

அதன் பிரகாரம் குறித்த பெண் தனது மகனுடன் நுவரெலியாவிற்கு வந்ததையடுத்து சந்தேகநபர்களன தம்பதியினர் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு நுவரெலியா பொது அங்காடிக்கு அருகில் வருமாறு கூறியுள்ளனர்.

சந்தேக நபர் பெண்ணுடன் பேசிக் கொண்டிருந்த போது, பயணக் களைப்பை போக்க சில பானங்களையும் சிற்றுண்டியையும் கொடுத்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

அவற்றை சாப்பிட்டுவிட்டு, அந்த பெண்ணும் அவரது மகனும் சுயநினைவை இழந்த நிலையில், சுயநினைவுக்கு வந்தபோது, நுவரெலியா மருத்துவமனையில் இருந்தனர்.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில், குறித்த பெண்ணின் தங்க நகைகள், ஒரு ஜோடி காதணிகள், சுமார் ஐந்து இலட்சம் பெறுமதியான தங்க நெக்லஸ், இரண்டு கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் 5000 ரூபா பணத்தை சந்தேகநபர்கள் எடுத்துச் சென்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அருகாமையில் உள்ள பல கடைகளில் இருந்த பாதுகாப்பு கமெரா காட்சிகளை சோதனை செய்ததில் சந்தேகத்திற்குரிய ஜோடி அடையாளம் காணப்பட்டதுடன் சந்தேகநபர்கள் பன்னில, வட்டவளை பிரதேசங்களில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பின்னர், விசாரணையின் போது, அவர்கள் 3 மாதங்களுக்கு முன்பு இதுபோன்ற குற்றங்களைச் செய்ததற்காக விளக்கமறியலில் இருந்து விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கண்டி, யாழ்ப்பாணம், பண்டாரவளை, ஜாஎல, குருநாகல் மற்றும் ஹட்டன் ஆகிய பொலிஸ் நிலையங்களில் சந்தேகநபர்களுக்கு எதிராக முன்னைய குற்றங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (அ)

# நாடளாவிய ரீதியில் எதிர்ப்பு போராட்டம்

## சுகாதார தொழிற்சங்கம் தீர்மானம்

கொழும்பு, ஜன. 20

**இடைநிறுத்தப்பட்டுள்ள தொழிற்சங்க நடவடிக்கைகளை எதிர்வரும் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்க உள்ளதோடு 23 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் மேற்கொள்ள உள்ளதாக சுகாதார தொழிற்சங்க கூட்டிணைவு தெரிவித்துள்ளது.**

வைத்தியர்களுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள 35 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை தமக்கும் வழங்குமாறு கோரி 72 சுகாதாரத் தொழிற்சங்கங்கள் கடந்த 11ஆம், 16 ஆம் திகதிகளில் 24 மணி நேர பணிப்புறக் கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் கொடுப்பனவு குறித்து சுகாதார அமைச்சர் மற்றும் நிதியமைச்சருக்கிடையில் இடம்பெற்ற கலந்துரையாடல் வெற்றியளிக்காத நிலையில் மீண்டும் எதிர்வரும் முதலாம் திகதி பணிப்புறக்கணிப்பை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் சுகாதார தொழிற்சங்கங்களின் தொழிசார் உரிமைகளுக்கு மறுப்பு தெரிவித்த சுகாதார அமைச்சு மற்றும் நிதி அமைச்சுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் 23 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளப்பட உள்ளதாக சுகாதாரத் தொழிற்சங்கங்கள் கூட்டிணையின் ஒருங்கிணைப்பாளர் வைத்தியர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

(அ)

# ஈரப்பலா, கிழங்கு விலைகளும் உயர்வு

கொழும்பு, ஜன. 20

சந்தையில் மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ள நிலையில், பலா, ஈரப்பலா, கிழங்கு மற்றும் வற்றாளை போன்ற உணவுப் பொருட்களின் விலையையும் சில வர்த்தகர்கள் அதிகரித்துள்ளனர்.

மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளமையால் நுகர்வோர் இவ்வாறான காய்கறிகளை கொள்வனவு செய்வதில் அதிகம் நாட்டம் காட்டி வருகின்றனர்.

இந்தநிலையில், பலா, வாழைப்பூ, வாழைக்காய், மாம்பழம் மற்றும் கீரை வகைகள் என்பன தற்போது, அதிகரித்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

அதன்படி, ஈரப்பலா காய் ஒன்றின் விலை 180 ரூபாவுக்கும், வாழைக்காய் 280 ரூபாவுக்கும், வாழைப்பூ 130 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

அத்துடன், பொன்னாங்கனி கீரையும் வல்லாரை கீரையும் 60 ரூபா முதல் 80 ரூபாவுக்கு இடைப்பட்ட விலையில் விற்கப்படுகிறது.

இதேவேளை, கடந்த சில நாட்களாக 2,500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட கரட் கிலோகிராம் ஒன்றின் விலை நேற்று சற்று வீழ்ச்சியடைந்திருந்தாக சந்தை தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி, பொருளாதார மத்திய நிலையங்களில் கரட் கிலோகிராம் ஒன்றின் விலை ஆயிரத்து 800 ரூபா முதல் இரண்டாயிரத்து 200 ரூபாவுக்கு இடைப்பட்ட விலையில் விற்கப்படுகின்றது.

இதுதவிர கோவா, கறி மிளகாய், போஞ்சி போன்ற மரக்கறிகளின் மொத்த விலை இன்று காலை 800 ரூபாவாக குறைந்துள்ளது.

(அ)

# சீனி இறக்குமதியின்போது மோசடி; பணத்தை மீளப் பெற நடவடிக்கை!

கொழும்பு, ஜன. 20

2020ஆம் ஆண்டில் சீனி இறக்குமதியின்போது, மோசடியில் ஈடுபட்ட நிறுவனங்களிடம் இருந்து பணத்தை மீள பெறுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க நிதி பற்றிய குழு அறிவுறுத்தியுள்ளது.

நிதியமைச்சு மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு, இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

2020ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 13ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய, சீனி இறக்குமதிக்கான விசேட வியாபாரப் பண்ட வரியில் 99.5 சதவீதம் குறைக்கப்பட்ட போதிலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காதது குறித்து அரசாங்க நிதிப்பற்றிய குழு முன்னதாக அதிருப்தி வெளியிட்டிருந்தது.

குறைக்கப்பட்ட வரி விகிதத்தை நியாயமற்ற வகையில் ஒரு சில பாரிய நிறுவனங்கள் அனுகூலம் பெறுவதற்கு இடமளித்தமையை தடுப்பதற்கு எந்தவொரு பொறுப்புக்கூறும் முறைமையும் செயற்படுத்தப்படவில்லை எனவும் அந்த குழு சுட்டிக்காட்டியிருந்தது.

இந்தநிலையில், சீனி இறக்குமதியின் போது, மோசடியில் ஈடுபட்ட நிறுவனங்களிடம் இருந்து பணத்தை மீள பெறுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கியுள்ளது.

(அ)

# கோட்டாபயவின் முறையற்ற பொருளாதார வேலைத்திட்டத்தால் பொருளாதார வீழ்ச்சி!

## ஆஷூ மாரசிங்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 20

2024 வாழ்க்கைச் செலவை தளர்த்தும் வருடமாக ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.அதனால் கொவிட் மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ்வின் முறையற்ற பொருளாதார வேலைத்திட்டம் காரணமாக மூடப்பட்ட தொழிற்சாலைகளை மீண்டும் ஆரம்பித்து நாட்டின் வருமானத்தை அதிகரிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்திருக்கிறார் என ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆஷி மாரசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் பொருளாதார அபிவிருத்தி வேகம் இந்த வருடத்தில் நூற்றுக்கு 2 வீதம் அதிகரித்துக்கொள்ள முடியும் அதேநேரம் 2025ஆம் ஆண்டில் அதனை நூற்றுக்கு 5 வீதமாக அதிகரித்துக்கொள்வதே அரசாங்கத்தின் இலக்காகும். இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக 2017 இல் நாட்டின் மொத்த வருமானம் 1914 பில்லியனாக இருந்ததுடன் ஆரம்ப செலவு 1892 பில்லியனாக இருந்தது. இதன் மூலம் ஆரம்ப கணக்கீட்டில் 22 பில்லியன் ரூபா மீதமாகி இருந்தது.

இவ்வாறு இருந்த நாடு, 2022 ஆகும்போது மொத்த தேசிய வருமானம் 2013 பில்லியனாகவும் ஆரம்பச் செலவு 2908 பில்லியனாகவும். இருந்தது. அதனால் ஆரம்ப கணக்கில் 895 பில்லியன் ரூபா மறை பெறுமானத்தில் இருந்தது. அதன் பிரகாரம் 2022இல் எமது அத்தியாவசிய செலவுகளுக்குக்கூட எமக்கு பணம் இருக்கவில்லை. அத்துடன் 2023இல் சர்வதேச நாணய நிதியம் எமது தேசிய வருமானத்தை 2850 பில்லியனாக அதிகரிக்க வேண்டும் என்ற இலக்கை வழங்கி இருந்தது. அப்போது எமது ஆரம்பச் செலவு 3063 பில்லியன் ரூபாவாக இருந்தது. அதன் பிரகாரம் எமது ஆரம்ப கணக்கீட்டு தொகை 209 பில்லியன் ரூபா மறை பெருமானத்துக்கு செல்லும் என்றே நாணய நிதியம் எதிர்வு கூறியிருந்தது.

என்றாலும் ஜனாதிபதியின் திறமையாலும் அரச வருமானத்தை அதிகரிக்கும் நிறுவனங்களின் செயற்திறமையினாலும் 2023 இல் தேசிய வருமானத்தை 3,115 பில்லியனாக அதிகரிக்க முடியுமாகி இருந்தது. அதன் ஆரம்ப செலவுகள் 3063 பில்லியனாகும். அதன் பிரகாரம் 2023 இல் எமது ஆரம்ப கணக்கீட்டில் 52 பில்லியன் ரூபா நேர் பெருமானத்தை அதிகரித்துக் கொள்ள முடியுமாகி இருந்தது. அதன் காரணமாகவே அரச ஊழியர்களுக்கு ஏப்ரல் மாதம் முதல் வழங்குவதாக இருந்த 10 ஆயிரம் கொடுப்பனவில் 5 ஆயிரம் ரூபா ஜனவரியில் வழங்க முடியுமாகி இருந்தது. எஞ்சிய 5ஆயிரம் ரூபாவை ஏப்ரல் மாதத்தில் இருந்து வழங்க முடியுமாகும்.

அத்துடன், 2024 இல் மொத்த தேசிய வருமானத்தை 4,117 பில்லியனாக அதிகரிப்பதே எமது இலக்காகும். ஆரம்ப கணக்கீட்டில் 250 பில்லியன் ரூபா நேர் பெருமானமாக அதிகரித்துக்கொள்ள வேண்டும் என நாணய நிதியம் தெரிவித்திருக்கிறது. இது மிகவும் சவாலான விடயமாகும். ஏனெனில் 2024 வாழ்க்கைச்செலவை தளர்த்தும் வருடமாக தெரிவித்திருக்கிறார். என்றாலும் அந்த சவாலை வெற்றிகொள்ள முடியும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது.

ஏனெனில், 2023 இல் சுற்றுலா பயணிகள் 15லட்சம் பேர் நாட்டுக்கு வந்திருக்கிறார்கள். ஜனவரி 15 ஆம் திகதிவரை 5 இலட்சம் சுற்றுலா பயணிகள் வந்திருக்கிறார்கள். அதன் பிரகாரம் 2024 முடிவடையும்போது 25இலட்சம் சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருவார்கள் என நாங்கள் நம்புகிறோம். அதேபோன்று வெளிநாட்டு செலாவணி கடந்த வருடத்தை விட நூற்றுக்கு 53 வீதம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

எனவே, நாட்டின் வருமானம் படிப்படியாக அதிகரித்துக் கொண்டு செல்கிறது. அதன் பிரகாரம் 2024 வாழ்க்கைச் செலவை தளர்த்தும் வருடம் என்றவகையில் அதனை செய்ய முடியுமாகும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது-என்றார்.

# மரக்கறிகளின் விலை உயர்வு; வற் வரி அதிகரிப்பே காரணம்!

## கூறுகின்றது தேசிய மக்கள் சக்தி

கொழும்பு, ஜன. 20

அதிக மழை வீழ்ச்சி காரணமாகவே மரக்கறிகளின் விலைகள் அதிகரித்ததாக அரசாங்கம் கூறுகிறது. ஆனால், தற்போது மழை வீழ்ச்சி குறைந்துள்ளது. மரக்றிகளின் விலைகள் குறையவில்லை என தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

பதுளையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில்-

வற் வரி அதிகரிப்பின் காரணமாக இறக்குமதி செய்யப்படும் கலப்பின விதைகளின் விலை மிகவும் அதிகமாக இருப்பது உள்ளிட்ட பல காரணிகள் காரணமாகவே மரக்கறிகளின் விலைகள் குறையவில்லை.

மரக்கறிகள் அதிகளவில் பதுளை மாவட்டத்திலேயே



உற்பத்தி செய்யப்படுகின்றன. கலப்பு விதைகளால் உற்பத்தி பாரிய அளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

கனமழையால் பாதிப்பும் ஏற்படுகிறது. ஆனால், இறக்குமதி செய்யப்படும் விதைகளின் விலை மிக அதிகமாக உள்ளது. உற்பத்தி குறைவடையும் ஒருபுறம் விதைகளும் கலப்புகளாக உள்ளன. அதேபோன்று தரமற்ற உரங்கள் பயன்படுத்துவதாலும் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது-என்றார்.

(அ)

# சீனி இறக்குமதியில் மோசடி தொடர்பில் நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை

கொழும்பு, ஜன. 20

கடந்த 2020ஆம் ஆண்டு இடம்பெற்ற சீனி இறக்குமதியின் போது, மோசடியில் ஈடுபட்ட நிறுவனங்களிடம் இருந்து பணத்தை மீள பெறுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க நிதி பற்றிய குழு அறிவுறுத்தியுள்ளது.

நிதியமைச்சு மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கே குறித்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறைக்கப்பட்ட வரி விகிதத்தை நியாயமற்ற வகையில் பாரிய நிறுவனங்கள் அனுகூலம் பெறுவதற்கு இடமளித்தமையை தடுப்பதற்கு எந்தவொரு பொறுப்புக்கூறும் முறைமையும் செயற்படுத்தப்படவில்லை எனவும் குறித்த குழு சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கைக்கு பதிலளிக்கமாட்டோம்!

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்



கொழும்பு, ஜன. 20

**யுக்திய விசேட சுற்றிவளைப்பை நிறுத்துமாறு அமெரிக்க தூதுவர் குறிப்பிடவில்லை. மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிடும் அறிக்கைகளை பொருட்படுத்த போவதுமில்லை, அதற்கு பதிலளிக்க போவதுமில்லை. போதைப்பொருள் மற்றும் பாதாள குழுவுக்கு எதிரான செயற்பாடுகளை தீவிரமாக முன்னெடுப்பேன். யுக்தியவுக்கு எதிராக செயற்படும் நபர்களின் பெயர் விவரத்தை வெகுவிரைவில் பகிரங்கப்படுத்துவேன் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.**

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் காரியாலயத்தில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஊடகக் காட்சிப்படுத்தலுக்காக யுக்திய என்ற விசேட சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்படுவதாக குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

போதைப்பொருள் ஒழிப்புக்காக முன்னெடுக்கப்பட்டுள்ள விசேட நடவடிக்கைகள் காட்சிப்படுத்தலா அல்லது உண்மை நோக்கமுடையதா என்பதை நாட்டு மக்கள் அறிவார்கள்.

யுக்திய விசேட சுற்றிவளைப்புக்கு எதிராக நாட்டு மக்கள் எவரும் போராட்டத்தில் ஈடுபடவில்லை. எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. போதைப்பொருள் வர்த்தகர்களுடன் நேரடியாகவும், மறைமுகமாகவும் தொடர்புடையவர்கள் தான் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள்.

யுக்திய விசேட சுற்றவளைப்பினை உடனடியாக நிறுத்த வேண்டும் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் குறிப்பிட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்தி குறித்து நான் அவரிடம் வினவினேன். தான் அவ்வாறு ஏதும் குறிப்பிடவில்லை என்றார்.

இந்த விசேட சுற்றிவளைப்புகள் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு எனக்கு அறிக்கை அனுப்பி வைத்துள்ளது. நான் அதை பொருட்படுத்த போவதுமில்லை. அதற்கு பதிலளிக்க போவதுமில்லை. போதைப்பொருள் மற்றும் பாதாள குழுவுக்கு எதிரான செயற்பாடுகளை தீவிரமாக முன்னெடுப்பேன்.

யுக்திய செயற்திட்டத்தினால் நாட்டின் தற்போது 17 சதவீதமளவில் சமூக விரோத செயற்பாடுகள் குறைவடைந்துள்ளன. ஆகவே நாட்டு மக்களுக்கான செயற்பாட்டை எக்காரணிகளுக்காகவும் இடைநிறுத்த போவதில்லை. இந்த விசேட செயற்திட்டத்துக்கு எதிராக செயற்படும் முக்கிய நபர்களின் பெயர் விவரத்தை வெகுவிரைவில் வெளியிடுவேன்-என்றார். (அ)

# கடற்றொழிலாளரின் படகு, இயந்திரம் 3 வள்ளங்கள், 4 வலைகளுக்கு தீ வைப்பு

கொழும்பு, ஜன. 20

புத்தளம் உடப்பு பொலிஸ் பிரிவிற்குபட்ட ஆண்டிமுனைப் பகுதியில் நேற்று அதிகாலை இனந்தெரியாத விசமிகள் கடற்றொழிலாளருக்கு சொந்தமான படகு, இயந்திரம், 3 வள்ளங்கள் மற்றும் 4 வலைகளுக்குத் தீ வைத்துள்ளனர்.

இதனால் படகு, இயந்திரம் முற்றாக தீக்கிரையுள்ளதாகவும் 3 வள்ளங்கள் பகுதியளவில் சேதமாகியுள்ளதாகவும் 4 வலைகளும் முற்றாக தீக்கிரையாகியுள்ளதாகவும் அப்பகுதி மீனவர்கள் குறிப்பிட்டனர்.

இவ்வாறு தீயிட்டு கொழுத்தப்பட்ட படகு, இயந்திரம், வள்ளங்கள் மற்றும் வலைகள் சுமார் 2 கோடி 15 இலட்சம் ரூபா பெறுமதியெனவை என தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான சம்பவம் உடப்பு ஆண்டிமுனைப் பகுதியில் இடம்பெற்றதில்லையெனவும் இதுவே முதல் தடவையெனவும் அப்பகுதி மீனவர்கள் சுட்டிகாட்டியுள்ளனர். (அ)

# பிரபல மீன் வியாபாரியை கொலை செய்ய முயற்சி!

## இராணுவ சிப்பாய் உட்பட இருவர் கைது

கொழும்பு, ஜன. 20

அம்பலாங்கொடையில் பிரபல மீன் வியாபாரி ஒருவரைக் கொலை செய்வதற்கு வந்த இராணுவச் சிப்பாய் ஒருவரும் மற்றுமொருவரும் துப்பாக்கி மற்றும் 14 தோட்டாக்களுடன் அம்பலாங்கொடை நகரத்தில் வைத்து கைது செய்துள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப் படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளும் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளது.

தற்போது வெளிநாட்டில் இருக்கும் அஹூங்கல்ல மற்றும் பலப்பிட்டிய பிரதேசங்களைச் சேர்ந்த பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் இருவரினால் வழங்கப்பட்ட ஒப்பந்தத்துக்கமையவே மீன் வியாபாரியை கொலை செய்ய இவர்கள் சென்றுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ள்து.

கைது செய்யப்பட்ட இராணுவச் சிப்பாய் கொழும்பை அண்டிய பன்னிப்பிட்டியவை வசிப்பிடமாகவும் மற்றைய சந்தேக நபர் பலப்பிட்டியவை சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (அ)

# கட்டைக்காட்டில் கடற்படை திடீரெனச் சுற்றிவளைப்பு!

## தடை செய்யப்பட்ட வலைகள் பறிமுதல்

யாழ்ப்பாணம், ஜன. 20

வடமராட்சி கிழக்கு, கட்டைக்காட்டுப் பகுதியில் தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகள் வெற்றிலைக்கேணி கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை குறித்த பகுதியிலுள்ள மீனவர்களையும், அவர்களது படகுகளையும் கடற்படையினர் சோதனையிட்டனர்.

இதன்போது தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகளை வைத்திருந்த மீனவர்களிடம் இருந்து குறித்த வலைகளை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கட்டைக்காட்டில் பகுதியில் சட்டவிரோத சுருக்குவலை தொழில் இடம்பெறுவதாக தகவல் கிடைத்ததாகவும் கடற்படையினர் சுற்றிவளைப்பை மேற்கொண்டிருந்த போது சுருக்கு வலை அகப்படவில்லை எனவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர் .

அத்துடன் அதிகளவு தங்கூசிவலைகள் கைப்பற்றப்பட்டதோடு கைப்பற்றப்பட்ட வலைகளை அழிக்கும் நடவடிக்கையில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# எதிர்கால நடவழக்கை குறித்து வார இறுதியில் முக்கிய முடிவு

## பல்கலை தொழிற்சங்க சம்மேளனம்

கொழும்பு, ஜன. 20

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் எதிர்கால தொழிற்சங்க நடவடிக்கைகள் குறித்து அனைத்து தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் பின்னர் இறுதி முடிவு எடுக்கப்படும் என பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான தொழிற்சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

விரிவுரையாளர்களுக்கான கொடுப்பனவுகளை மாத்திரம் அதிகரிப்பதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து அரச பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்கள் நேற்று முன்தினம் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு வழங்கப்படும் கல்விக் கொடுப்பனவை 25 வீதத்தால் அதிகரிப்பதற்கான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தீர்மானத்திற்கு இம்மாத முற்பகுதியில் அமைச்சர்கள் அமைச்சரவை அனுமதி வழங்கியது.

இந்த கொடுப்பனவு அவர்களின் ஜனவரி மாதச் சம்பளத்தில் சேர்க்கப்படும் என்று முடிவு செய்யப்பட்டது.

எவ்வாறெனினும், இந்த அமைச்சரவை தீர்மானமானது கல்விசாரா ஊழியர்களை கவலையடையச் செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ள பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான தொழிற்சங்க சம்மேளனம் நேற்று முதல் வழமை போன்று சேவைகளை வழங்குவதாகவும், தமது எதிர்கால தொழிற்சங்க நடவடிக்கைகள் குறித்து வார இறுதியில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# வெளிநாடுகளில் வேலை செய்துவிட்டு திரும்பிய பெண்களிடம் பண மோசடியில் ஈடுபட்டவர் கைது

கொழும்பு, ஜன. 20

வெளிநாடுகளில் வேலை செய்துவிட்டு நாடு திரும்பிய பெண்களின் வீடுகளுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரியாக பாவனை செய்து பண மோசடியில் ஈடுபட்டதாக கூறப்படும் சந்தேக நபர் ஒருவர் கண்டி - ஹதரலியத்த பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் நாடு திரும்பிய பெண்களிடம் அவர்களது காப்பீடு பணம் காலாவதியாகியுள்ளதாகவும் அவ்வாறு காலாவதியான பணத்தை மீள பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் பணம் செலுத்த வேண்டும் எனவும் கூறி அவர்களிடம் இருந்து பணம் பெற்று மோசடி செய்துள்ளதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கண்டி - ஹதரலியத்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# முன்னாள் கிராம உத்தியோகத்தர் ரயிலுடன் மோதுண்டு உயிரிழப்பு!

கொழும்பு, ஜன. 20

களுத்துறை - மக்கோன ரயில் நிலையத்துக்கு அருகில் ரயிலுடன் மோதுண்டு முன்னாள் கிராம உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் மக்கோன பிரதேசத்தை சேர்ந்த 73 வயதுடையவராவார்.

அளுத்கமையில் இருந்து பொல்கஹவெல நோக்கி பயணித்த ரயிலில் மோதுண்டே இவர் உயிரிழந்துள்ளார்.

காயமடைந்தவர் களுத்துறை நாகொடை போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார். (அ)

# இரணைமடுக்குள வான் கதவுகள் மூன்றாவது தடவையாக திறப்பு!

## மக்கள் பாதுகாப்புடன் செயற்படுமாறு எச்சரிக்கை

கிளிநொச்சி, ஜன. 20

தற்போது பெய்து வரும் மழை காரணமாக கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் வான் கதவுகள் மூன்றாவது தடவையாக திறக்கப்பட்டுள்ளது.

தற்போது குளத்திற்கு வரும் நீர் வரவு அதிகரித்துள்ள நிலையில் குளத்தின் 14 வான் கதவுகளில் 08 வான் கதவுகள் 06 அங்குலத்திற்கு திறந்து விடப்பட்டுள்ளன.

குளத்தின் கீழுள்ள தாழ் நிலப் பகுதியில் வாழ்கின்ற மக்கள் பாதுகாப்புடன் செயற்படுமாறு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் இடர் முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது. (அ)

# மீனவர்களின் சமகால பிரச்னைகளை தீர்க்க பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் நடவடிக்கை

அம்பாறை, ஜன. 20

**அம்பாறை மாவட்ட மீனவர்கள், படகு உரிமையாளர்கள் மற்றும் இயந்திர படகு உரிமையாளர்கள் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் அவசரமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் எஸ்.ஜே. கஹவத்தவை சந்தித்து கலந்துரையாடினார்.**



இந்த சந்திப்பின்போது அம்பாறை மாவட்ட ஆழ்கடல் மற்றும் மீனவ படகு உரிமையாளர்கள் சமகாலத்தில் எதிர்நோக்கும் பிரச்னைகளை பணிப்பாளர் நாயகத்திற்கு விளக்கிய பாராளுமன்ற உறுப்பினர் ஹரிஸ், கடலில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களின் தொடர்பாடலுக்கான வயர்லஸ் தொழில்நுட்ப மத்திய நிலையம் சாய்ந்தமருதில் கடந்த காலங்களில் இயங்கி வந்த விடயத்தையும் அந்த மத்திய நிலையம் இப்போது இயங்காது மூடப்பட்டுள்ள விடயத்தையும் விளக்கி அந்த நிலையத்தை நவீன தொழில்நுட்ப சாதனங்களை நிறுவி மீண்டும் இயங்கச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டார். அதனை ஏற்றுக்கொண்ட கடற்றொழில் திணைக்கள பணிப்பாளர் நாயகம் அடுத்த மாத (பெப்ரவரி) இறுதி அளவில் மீண்டும் அந்த மத்திய நிலையத்தை இயக்க தேவையான சாதனங்களை நிறுவி மீள திறக்க தான் உடனடி நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

மேலும் திருகோணமலை, வாழைச்சேனை போன்ற மீன்பிடித் துறைமுகங்களில் படகு உரிமையாளர்கள் வெளியிலிருந்து எரிபொருள் கொண்டு செல்வது தடுக்கப்படுவதாகவும் இதனால் மீனவர்களும், படகு உரிமையாளர்களும் கடுமையான அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்ற விடயங்களை சுட்டிக்காட்டிய பாராளுமன்ற உறுப்பினர் இதற்கான அனுமதியை படகு உரிமையாளர்கள், மீனவர்களுக்கு வழங்குமாறு கேட்டுக் கொண்டார். இதனையடுத்து கடற்தொழில் துறைமுக கூட்டுத்தாபன பொது முகாமையாளரை தொடர்பு கொண்டு அனுமதி கொடுப்பதற்கான வேலைத்திட்டத்தை முன்னெடுக்குமாறு பணிப்பாளர் நாயகம் பொதுமுகாமையாளரை பணித்ததுடன் உடனடியாக அனுமதி வழங்க தேவையான நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளார். இதனால் அம்பாறை மாவட்ட மீனவர்களின் நீண்ட கால பிரச்னையை தீர்க்க பாராளுமன்ற உறுப்பினர் நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் அவசர சேவை பிரிவு கட்டடம் கையளிப்பு



அம்பாறை, ஜன. 20

பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் 20 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட அவசர சேவை பிரிவுக்கான கட்டடத் தொகுதி கடந்த வியாழக்கிழமை உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

இலங்கை தேசிய கட்டடங்கள் திணைக்களத்தினால் 20 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்த புதிய கட்டடத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகிலா இஸ்ஸதீன், திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம் மாஹிர் உட்பட உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்

பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் கார்த்திகேயனால் ஒழுங்குபடுத்தப்பட்ட இந்நிகழ்வில் வைத்தியசாலையின் வைத்தியர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டதுடன் நிகழ்வின் இறுதியாக மரங்களும் நட்டு வைக்கப்பட்டன.

# ராணி சீதரனின் நூல் அறிமுக விழா!

திருமலை, ஜன. 20

அன்பின் பாதை எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ராணி சீதரனின் “கடவுள்தான் அனுப்பினாரா” என்ற நூல் அறிமுக விழா இன்று சனிக்கிழமை மாலை 3.45 மணியளவில் திருகோணமலை நகராட்சி மன்ற பொதுநூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

அன்பின் பாதை எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் கனக. தீபகாந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள இவ்விழாவுக்கு பிரதம அதிதியாக ஓய்வுபெற்ற அதிபர் சிரேஷ்ட ஊடகவியலாளர் திருமலை நவம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு அதிதிகளாக வைத்தியலிங்கம் ஜெயச்சந்திரன், சிரேஷ்ட சட்டத்தரணி சுபாசினி சித்திரவேலு, இலங்கை மத்திய வங்கியின் கிழக்கு மாகாண பிராந்திய முகாமையாளர் க.பிரபாகரன், பென் ஹோல்டிங் லிமிட்டெட் நிதிக் கணக்காளர் தயாளலிங்கம் பிரசாதனன் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.




நூலின் அறிமுகம் மற்றும் நயவுரையை எழுத்தாளர் தில்லைநாதன் பவித்திரனும்,

நன்றியுரையை அன்பின் பாதை றொசில்டா அன்டன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு மீன் வியாபார நலன்புரிச் சங்கம் உதவி

அம்பாறை, ஜன. 20

அண்மையில் இடம்பெற்ற சீரற்ற காலநிலையால் மழை, வெள்ளம் மற்றும் வான்கதவுகள் திறப்பு காரணமாக சாய்ந்தமருது வொலிவேரியன் கிராமத்தின் ஒரு பகுதி வெள்ள நீரில் மூழ்கியிருந்தது.

குறித்த பிரதேசத்தில் வசித்த மக்கள் இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருந்தனர். அவ்வாறான சந்தர்ப்பத்தில் பிரதேச செயலகத்தின் வழிகாட்டலில் பல்வேறு உதவி வழங்கும் நிறுவனங்களினாலும் தனி நபர்களாலும் சமைத்த உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

தற்போது வெள்ளம் வடிந்துள்ள நிலையில் குறித்த பிரதேசத்தில் வசித்த குடும்பங்களுக்கு சாய்ந்தமருது கலாச்சார மண்டபத்தில் வைத்து மாளிகா மீன் மொத்த வியாபார மற்றும் நலன்புரி சங்கம் உலர் உணவுப் பொதிகளை வழங்கியது.



மாளிகா மீன் மொத்த வியாபார மற்றும் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கௌரவ அதிதிகளாக காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் மற்றும் சாய்ந்தமருது உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ. முஆபிக்கா ஆகியோரும் விஷேட அதிதிகளாக சாய்ந்தமருது பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எம்.என்.எம். றம்ஷான், கிராம சேவை உத்தியோகத்தர்களான ஏ.எம். அஜ்ஹர், ஏ.ஏ. நஜீம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ)

# தென்கிழக்கு பல்கலைக்கழத்தில் தொடர்கிறது சுத்திகரிப்புப் பணி!

## உதவிக்கு விரைந்தது அக்கரைப்பற்று மாநகரசபை

அம்பாறை, ஜன. 20

அண்மையில் இடம்பெற்ற வெள்ளப்பெருக்கின் காரணமாக தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தின் சில பகுதிகள் வெகுவாக பாதிக்கப்பட்டிருந்தது. இதில் பௌத்த, இந்து மற்றும் கிறிஸ்தவ தேவாலயங்களும் பாதிப்புகளுக்கு உள்ளாகியிருந்தன.

மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் தலைமையில் இரண்டாது நாளாகவும் சுத்திகரிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த சுத்திகரிப்புப் பணியில் அக்கரைப்பற்று மாநகரசபையின் தீ அணைப்பு பிரிவும் இணைந்து கொண்டது. இன்றைய நிகழ்வில் பௌத்த, இந்து மற்றும் கிறிஸ்த்தவ தேவாலயங்கள் ஊழியர்களால் சுத்தம் செய்யப்பட்டன.

உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கருடன் நூலகர் எம்.எம்.றிபாவுட்டீன் பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர், கலை கலாச்சார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில், அரபு மற்றும் இஸ்லாமிய பீடத்தின் பீடாதிபதி எம்.எச்.ஏ. முனாஸ், வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் பீடாதிபதி கலாநிதி எஸ். சபீனா எம்.ஜி.எச்., பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் ஏ.எம்.எம். முஸ்தபா, வேலைப்பகுதி பொறியியலாளர் எம்.எஸ்.எம். பஸில், மற்றும் பேராசிரியர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், கல்விசாரா ஊழியர் சங்க தலைவர் எம்.ரீ. எம். தாஜூதீன், செயலாளர் எம்.எம். முஹம்மட் காமில் உள்ளிட்ட பலரும் மிகுந்த அர்ப்பணிப்புடன் சுத்திகரிப்புப் பணிகளில் ஈடுபட்டனர். (அ)

# வடகொரியா நீருக்கடியில் அணுவாயுதச் சோதனை!



பியொங்யாங், ஜன. 20

இந்த வாரம் அமெரிக்கா, தென் கொரியா மற்றும் ஜப்பான் மேற்கொண்ட கூட்டுப் பயிற்சிகளுக்கு பதிலடியாக வட கொரியா தனது நீருக்கடியிலான அணு ஆயுத அமைப்பு சோதனையை நடத்தியுள்ளது.

அணு ஆயுதத்தை சுமந்து செல்லக்கூடிய நீருக்கடியில் ஆளில்லா ஏவுகணை கிழக்கு கடற்கரையில் சோதனை செய்யப்பட்டதாக வடகொரிய அரசு நடத்தும் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த அறிக்கைகள் குறித்து கருத்து தெரிவிக்க ஜப்பான் மறுத்துவிட்டது.

வடகொரியா நீருக்கடியில் தாக்குதல் நடத்தும் தனது ‘ஹெய்ல்-5-23’ அமைப்பின் சோதனைகளை குறித்து முன்னரே எச்சரித்துள்ளது.

இந் நிலையில் அமெரிக்கா, தென்கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் கூட்டு பயிற்சி நடவடிக்கைகளுக்கு பதிலடியாக இந்த சம்பவம் அரங்கேறியுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை வட கொரியா தனது நீருக்கடியிலான ஆயுதங்களை சோதனை செய்வதற்கு வொஷிங்டன், சியோல் மற்றும் டோக்கியோவின் கூட்டுப் பயிற்சிகளால் தூண்டப்பட்டதாக வட கொரிய அரச நிறுவனத்தின் அறிக்கைகள் சுட்டிக்காட்டியுள்ளன. (அ)




# ரஷ்ய, சீன நாட்டுக் கப்பல்கள் செங்கடலில் பாதுகாக்கப்படும்

## ஹூதி கிளர்ச்சியாளர்கள் உறுதி

மொஸ்கோ, ஜன. 20

செங்கடலில் ரஷ்ய, சீனக் கப்பல்கள் பாதுகாப்பாகச் சென்றுவரும் என ஹூதி கிளர்ச்சிப் படையின் மூத்த அதிகாரி முகமது அல்-புக்கைதி தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் நாளேடு ஒன்றுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றின்போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

“ரஷ்யா, சீனா உள்ளிட்ட பிற நாடுகளின் கப்பல்களுக்கு செங்கடல் வட்டாரத்தில் எந்த விதமான அச்சுறுத்தலும் இல்லை.

மேலும், அந்தக் கப்பல்கள் பாதுகாப்பாக செங்கடலைக் கடப்பதை உறுதிசெய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம்.

ஏனெனில் தடையற்ற கப்பல் போக்குவரத்து ஏமனுக்குக் குறிப்பிடத்தக்க பங்களிக்கிறது.

இருப்பினும் இஸ்ரேலுடன் தொடர்புடைய கப்பல்கள் மீது தாக்குதல் தொடரும்.

கப்பல்களைக் கைப்பற்றுவதோ மூழ்கடிப்பதோ எங்கள் இலக்கு அல்ல. இஸ்ரேலின் செலவுகளை அதிகரிக்கச் செய்வதே நோக்கம்.

இந்நடவடிக்கை காஸாவில் போரை நிறுத்த உதவும்” என தெரிவித்தார். (அ)

# போருக்கு மத்தியிலும் சேதமடைந்த கட்டடங்களை சீரமைக்கும் உக்ரைன்

## இடிப்பாடுகளை அகற்றும் படையினர்

கீவ், ஜன. 20

போருக்கு மத்தியில் உக்ரைன், ரஷ்ய தாக்குதல் காரணமாக சேதமடைந்த கட்டடங்களை புனரமைக்கும் பணிகளை ஆரம்பித்துள்ளது.

உக்ரைனின் ட்ரொஸ்டியனெட்ஸ் நகரில் புதிய போக்குவரத்து மத்திய நிலையத்திற்கான வீதியை நிர்மாணிப்பதற்காக ரயில், பேருந்து நிலையங்களுக்கு இடையிலான இடிபாடுகளையும் அகற்றும் பணியில் அந்நாட்டு படையினர் ஈடுபட்டுள்ளனர்.

ரஷ்யாவின் தாக்குதல் காரணமாக ட்ரொஸ்டியனெட்ஸ் நகரம் கடுமையாக சேதமடைந்தது. அரசாங்க நிதியுதவியுடன் மீண்டும் புனரமைக்கப்படும் ஆறு பகுதிகளில் இந்த நகரமும் ஒன்று.

நகருக்கும் மீண்டும் திரும்பி வரவேண்டிய அனைவருக்காகவும் நகரில் குழந்தைகளுக்கு சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்திக்கொடுக்க போராடி வருவதாகவும் நகர மேயர் யுரி போவா தெரிவித்துள்ளார்.

அனைத்தையும் மீண்டும் புனரமைக்க வேண்டும் நூலகங்கள், தொழிற்சாலைகள், பாடசாலைகள், மருத்துவமனைகள் ஆகியவற்றையும் புனரமைக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார்.



உக்ரேன் உடனடியாக மறுசீரமைக்கப்பட வேண்டும் என்று கீவில் உள்ள அதிகாரிகள் கோடிகாட்டியுள்ளனர். அதற்கு பில்லியன்கணக்கில் செலவாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், உக்ரைன் - ரஷ்யா இடையிலான போர் முடிவுக்கு வரும் அறிகுறிகள் தென்படவில்லை பாதுகாப்பு ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நிதிப் பற்றாக்குறையை எதிர்நோக்கும் உக்ரைன் தனது நாட்டுக்கு எதிரான ரஷ்யாவின் புதிய தாக்குதல்களில் இருந்து தன்னை பாதுகாத்து வருகிறது.

அத்துடன் ரஷ்யா, உக்ரைனில் மக்கள் அதிகமாக வசிக்கும் இடங்களில் பெரிய அளவிலான விமான தாக்குதல்களை நடத்தியுள்ளது.

ட்ரொஸ்டியனெட்ஸ் நகரில் இருந்து 20 கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஒக்திர்கா நகரமும் ரஷ்யாவின் விமான குண்டு வீச்சு தாக்குதல்களால் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நகரங்களை சொகுசான நிலைமைக்கு கொண்டு வரும் வாய்ப்பு உக்ரைனுக்கு தற்போது கிடையாது என ஒக்திர்கா மேயர் பாவ்லோ குஸ்மெங்கோ கூறியுள்ளார். (அ)

# அமெரிக்காவிடம் ஏவுகணைகள் கொள்வனவு செய்யும் ஜப்பான்!

## பாதுகாப்புக்காக பெருமளவு நிதியும் ஒதுக்கீடு

ரோக்கியோ, ஜன. 20

நீண்ட தூரம் சென்று தாக்கக்கூடிய 400 ரொமாஹக் ஏவுகணைகளை கொள்வனவு செய்வதற்காக ஜப்பான், அமெரிக்காவுடன் உடன்படிக்கை ஒன்றை செய்துகொண்டுள்ளது.

பிராந்தியத்தில் நிலவும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளவதற்காக தனது இராணுவ பலத்தை அதிகரிக்கும் வகையில் ஜப்பான் நேற்று முன் தினம் அமெரிக்காவுடன் இந்த உடன்படிக்கையை செய்துகொண்டுள்ளது.

ரொமாஹக் ஏவுகணைகள் ஆயிரத்து 600 கிலோமீட்டர் தொலைவில் உள்ள இலக்கு நோக்கி தாக்குதல் நடத்தும் வல்லமை கொண்ட ஏவுகணைகள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2.35 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு இருவகை ரொமாஹக் ஏவுகணைகளை ஜப்பானுக்கு விற்பனை செய்ய கடந்த நவம்பர் மாதம் அமெரிக்காவின் பென்டன் ஒப்புதல் வழங்கியது.

இந்த நிலையில் எதிர்வரும் 2027ஆம் ஆண்டிற்குள், தனது மொத்த உள்நாட்டு தேசிய உற்பத்தியில் இரண்டு சதவீதத்தை நாட்டின் பாதுகாப்புக்காக செலவிட ஜப்பான் அரசாங்கம்



திட்டமிட்டுள்ளது.

இதனடிப்படையில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஆரம்பமாகும் அடுத்த நிதியாண்டிற்காக 56 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஜப்பான் பாதுகாப்புக்காக ஒதுக்கியுள்ளது.

வடகொரியா அணுவாயுத ஏவுகணை கொண்டுள்ள நாடு என்பதால், பிராந்தியத்தின் பாதுகாப்பு அச்சுறுத்தலாக இருப்பதாக ஜப்பான் கூறியுள்ளது.

வடகொரியா அடிக்கடி ஏவுகணைகளை பரிசோதித்து தனது எதிரி நாடுகளை அச்சமடைய செய்து வருகிறது.

தனது நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்த ஜப்பான் அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளை அமெரிக்கா பாராட்டியுள்ளது.

அதேவேளை ஜப்பானில் தயாரிக்கப்படும் பேட்ரியாட் ஏவுகணைகளை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதற்கு வசதியாக கடந்த டிசெம்பர் மாதம் ஜப்பான் ஆயுத ஏற்றுமதி கட்டுப்பாடுகளை தளர்த்தியது. (அ)

# அமெரிக்காவின் கோரிக்கையை நிராகரித்தார் இஸ்ரேல் பிரதமர்!

ஜெருசலேம், ஜன. 20

காஸாவின் போர் முடிவுக்கு வந்த பின்னர் பாலஸ்தீன தனி நாடு அமைக்கப்பட வேண்டும் என்ற அமெரிக்காவின் வலியுறுத்தலுக்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தனியாஹூ, தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

வொஷிங்டனின் இந்த கோரிக்கை குறித்து தான் அமெரிக்காவிடம் எதிர்ப்பை தெரிவித்துள்ளதாக அவர் கூறியுள்ளார். காஸா போரில் முழுமையாக வெற்றிபெறும் வரை போர் தொடரும்.

ஹமாஸ் அமைப்பின் கிளர்ச்சியாளர்களை முற்றாக அழிப்பதும் அவர்களிடம் சிக்கியுள்ள இஸ்ரேலிய பணயக்கைதிகளை மீட்பதுமே இஸ்ரேலின் இலக்கு. இதற்குப் பல மாதங்கள் சொல்லாம் எனவும் இஸ்ரேலியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

காஸா மீது இஸ்ரேல்



நடத்தி இராணுவ தாக்குதல்கள் காரணமாக 25 ஆயிரம் பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளதாக காஸா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

காஸாவில் 85 வீதமாக மக்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ள நிலையில் போரை முடிவுக்கு கொண்டு வர சமாதான பேச்சுவார்த்தையில் ஈடுபடுமாறு இஸ்ரேலுக்கு கடும் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருகிறது.

அமெரிக்கா உட்பட இஸ்ரேலின் பல நாடுகள் இரு நாடுகள் என்ற தீர்வை வலியுறுத்தி வருகின்றன.

எனினும் பெஞ்சமின் நெத்தனியாஹூ அதற்கு இணங்கவில்லை என்பது அவரது கருத்துக்கள் மூலம் தெளிவாகியுள்ளது.

ஜோர்தான் நதிக்கு மேற்கில் உள்ள நிலப்பகுதி முழுவதும் இஸ்ரேலின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கவேண்டும் என அவர் நிபந்தனை விதித்துள்ளார். அந்தப் பகுதி பாலஸ்தீனத்தையும் உள்ளடக்கிய பகுதி என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தை 225 எம்.பிக்களும் எதிர்க்கவேண்டும்

## சிவில் அமைப்பினர் கூட்டாக வலியுறுத்தல்

கொழும்பு, ஜன. 20

**நாட்டு மக்களுக்கு அரசியலமைப்பினால் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை கேள்விக்குள்ளாக்கும் வகையில் சட்டமியற்றும் அதிகாரம் மக்கள் பிரதிநிதிகளுக்கு கிடையாது. அடுத்த வாரம் இரண்டாம் வாசிப்புக்காக எடுத்துக் கொள்ளப்படவுள்ள நிகழ்நிலை காப்பு சட்டமூலத்துக்கு எதிராக 224 உறுப்பினர்கள் வாக்களிக்க வேண்டும். சட்ட மூலத்துக்கு ஆதரவாக வாக்களிப்பவர்களுக்கு நாட்டு மக்கள் தேர்தல் ஊடாக தக்க பதிலடி கொடுக்க வேண்டும் என சிவில் அமைப்பின் பிரதிநிதிகள் கூட்டாக வலியுறுத்தினர்.**

இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்ட சிவில் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு வலியுறுத்தினர்.

சுதந்திர ஊடக மையத்தின் செயலாளர் லசந்த சில்வா குறிப்பிட்டதாவது:-

பொருளாதார பாதிப்பினால் நாட்டு மக்கள் சொல்லொன்னா துயரங்களை எதிர்க்கொண்டுள்ளார்கள். பொருளாதார மீட்சிக்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக குறிப்பிட்டுக் கொண்டு நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை முடக்குவதற்கான சட்டங்களை இயற்றுவதற்கு அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது.

நாட்டு மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காகவே மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுகிறார்கள். ஆகவே, மக்கள் பிரதிநிதிகள் மக்களின் அபிலாசைகளுக்கு அமைய செயற்பட வேண்டும். அரசியலமைப்பினால் வழங்கப்பட்டுள்ள உரிமைகளுக்கு மதிப்பளித்து மக்கள் பிரதிநிதிகள் செயற்பட வேண்டும்.

ஊடக மற்றும் பேச்சு சுதந்திரத்தை முடக்கும் வகையில் நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது. நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகளை முன்னிலைப்படுத்தி மக்கள் பிரதிநிதிகள் செயற்பட வேண்டும். மக்களின் உரிமைகளுக்கு எதிராக செயற்படும் தரப்பினருக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்ட வேண்டும்-என்றார்.

தேசிய சமாதான பேரவையின் நிறைவேற்று பணிப்பாளர் ஜெஹான் பெரேரா குறிப்பிடுகையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவர் தலைமையிலான அரசாங்கத்தின் சட்ட வகிபாகம் கேள்விக்குள்ளாக் கப்பட்டுள்ளது. ஜனாதிபதிக்கும், பாராளுமன்றத்துக்கு மக்களாணை என்பதொன்று கிடையாது.

பல பொய்யான காரணிகளை குறிப்பிட்டுக் கொண்டு தேர்தல் பிற்போடப்பட்டு மக்களின் வாக்குரிமை மறுக்கப்பட்டுள்ள நிலையில் மக்களின் அடிப்படை உரிமைகளை இல்லாதொழிக்கும் வகையில் நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் மற்றும் பயங்கரவாத தடைச்சட்டம் என்பன சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை பொருளாதார காரணிகளுடன் தொடர்புப்படுத்தும் வகையில் ஏற்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. தொழிற்சங்க போராட்டங்களில் ஈடுபடுவதும் பயங்கரவாத செயற்பாடு என்று சித்தரிக்கும் வகையில் இந்த சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே, நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு எதிராக சட்டங்களுக்கு கையுயர்த்துவதை மக்கள் பிரதிநிதிகள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை குறிப்பிட்டுக் கொள்கிறோம்-என்றார்.

மாற்றுக் கொள்கைக்கான மத்திய நிலையத்தின் நிறைவேற்று பணிப்பாளர் பாக்கிய சோதி சரவணமுத்து குறிப்பிடுகையில்,

பாரதூரமான இரண்டு சட்டமூலங்களை அரசாங்கம் முன்வைத்துள்ளது. நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்துக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் கடும் எதிர்ப்புகள் தோற்றம் பெற்றுள்ள நிலையில் அதனை பொருட்படுத்தாமல் அந்த சட்டத்தை உருவாக்க அரசாங்கம் உத்வேகத்துடன் செயற்படுகிறது. இந்த சட்டமூலம் சட்டமாக்கப்பட்டால் பொருளாதார பாதிப்பு தீவிரமடையும், ஆகவே மக்கள் பிரதிநிதிகள் பொறுப்புடன் செயற்படவேண்டும்-என்றார்.

(அ)

# ஒரு தொகுதி போதை மாத்திரைகள் மன்னார் தாழ்வுபாடு பகுதியில் மீட்பு!



மன்னார், ஜன. 20

மன்னார் தாழ்வுபாடு பகுதியில் உள்ள காணி ஒன்றில் இருந்து நேற்று முன் தினம் ஒரு தொகுதி போதை மாத்திரைகள் மீட்கப்பட்ட தோடு, சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

மன்னார் தாழ்வுபாடு பகுதியில் உள்ள காணி ஒன்றில் போதை மாத்திரைகள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக தாழ்வுபாடு கடற்படைக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் கடற்படையினருடன், தலை மன்னார் போதைப்பொருள் குற்றத்தடுப்புப் பிரிவினர் இணைந்து குறித்த பகுதியில் உள்ள காணியை சோதனையிட்டனர்.

இதன்போது குறித்த காணியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 150 மில்லி கிராம் நிறை கொண்ட 24 ஆயிரம் போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளதோடு, சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரும், மீட்கப்பட்ட போதை மாத்திரைகளும் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருவதோடு, மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் மற்றும் மீட்கப்பட்ட போதை மாத்திரைகள் என்பன மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவுள்ளது.

அண்மைய நாட்களாக சட்டவிரோதமான முறையில் இந்தியாவில் இருந்து படகு மூலம் இலங்கைக்கு கடத்தப்படும் போதை மாத்திரைகள் விற்பனைக்காக மன்னாரில் உள்ள சில கிராமங்களில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் நிலையில் பாதுகாப்புத் துறையினரால் மீட்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# பொலிஸ் சூட்டில் சாரதி பலி!

கொழும்பு, ஜன. 20

உத்தரவை மீறி ஓட்டிச் சென்றதாகக் கூறப்படும் லொறியை பொலிஸார் நிறுத்த முயன்றபோது, பொலிஸ் அதிகாரியொருவரின் கையில் இருந்த துப்பாக்கியால் சுடப்பட்டு, லொறியின் சாரதி உயிரிழந்துள்ளதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நாரம்மல பிரதேசத்தை சேர்ந்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். உத்தரவை மீறி இயக்கப்பட்ட லொறியின் பின்னால் விரட்டிச் சென்ற போது, லொறி சாரதியை பயமுறுத்துவதற்காக துப்பாக்கியால் சுட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவத்தினால் கோபமடைந்த பொதுமக்கள் குழுவினால் பொலிஸாரின் சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கோபமடைந்த உள்ளூர்வாசிகள் நாரம்மல பொலிஸாரை சுற்றி வளைத்து சொத்துக்களை சேதப்படுத்தியதாக மூத்த அதிகாரி தெரிவித்தார்.

சிவில் உடையில் இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் நாரம்மல பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது லொறி ஒன்றை நிறுத்துமாறு உத்தரவிட்டுள்ளனர்.

உத்தரவிட்டும் சாரதி லொறியை நிறுத்தாமையால் மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களும் லொறியை துரத்திச் சென்று நிறுத்தியுள்ளனர். இதன்போதே துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்தது.

அப்போது அங்கு கூடியிருந்த அப்பகுதி மக்கள் சப்-இன்ஸ்பெக்டர் மற்றும் கான்ஸ்டபிளுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வன்முறையில் ஈடுபட்டதுடன் நாரம்மல பொலிஸாரை சுற்றி வளைத்து கதவுகளை உடைத்து சொத்துகளை சேதப்படுத்தினர்.

நிலைமையை கட்டுப்படுத்த பொலிஸ் விசேட அதிரடிப் படை மற்றும் பொலிஸ் குழுக்களை ஈடுபடுத்த வேண்டியிருந்தது என உயர் அதிகாரி தெரிவித்தார்.

வேண்டுமென்றே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

துப்பாக்கிச்சூடு நடத்திய பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# போதைப்பொருள் பாவிக்கும் பொலிஸார் சேவையிலிருந்து முற்றாக நீக்கப்படுவர்!

## பொலிஸ்மா அதிபர் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 20

போதைப்பொருட்களை பாவிக்கும் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மருத்துவ பரிசோதனையை தொடர்ந்து இன்னும் ஒரு மாத காலத்துக்குள் அவர்கள் சேவையில் இருந்து முழுமையாக நீக்கப்படுவார்கள். பாதாள குழுவுடன் தொடர்புடைய அதிகாரிகளுக்கு குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிறுவர் மற்றும் பெண்களுக்கு எதிராக சித்திரவதை மற்றும் தாக்குதல்கள் தொடர்பில் முறைப்பாடளிப்பதற்கு ‘109’ என்ற விசேட இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கிடைக்கப் பெறும் முறைப்பாடுகளுக்கு அமைய 48 மணிநேரத்திற்குள் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோக்கத்துக்கு உள்ளாக்கி அதனை காணொளி எடுத்து சமூக ஊடகங்களில் பதிவேற்றம் செய்யும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயற்பாடுகளில் ஒருதரப்பினர் ஈடுபடுகிறார்கள். சுமார் 1 இலட்சம் காணொளிகள் அடையாளப்படுத் தப்பட்டுள்ளன. ஆகவே சிறுவர் பாதுகாப்பு குறித்து விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் சேவையில் உள்ள பெரும்பாலான அதிகாரிகள் உட்பட கீழ்மட்ட அதிகாரிகள் போதைப்பொருள் பாவிப்பதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இவ்விடயம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு தற்போது வைத்திய பரிசோதனை அறிக்கை கோரப்பட்டுள்ளது. போதைப்பொருள் பாவிக்கும் பொலிஸ் அதிகாரிகள் ஒருமாத காலத்துக்குள் சேவையில் இருந்து முழுமையாக நீக்கப்படுவார்கள்.

போதைப்பொருள் சுற்றிவளைப்பு தற்போது வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகிறது. போதைப்பொருள் விநியோகத்தில் ஈடுபடும் 4,292 பேரில் இதுவரை 1,973 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆகவே போதைப்பொருள் சுற்றிவளைப்பு நடவடிக்கை வெற்றி பெற்றுள்ளன.

இந்த சுற்றிவளைப்பின் போது எவரும் சட்டவிரோதமான முறையில் கைது செய்யப்படவில்லை. தடுப்பு காவலில் வைக்கவுமில்லை. நீதவானின் அனுமதியுடன் தான் தடுப்பு காவல் செயற்படுத்தப்படுகிறது. கடந்த ஒரு மாத காலப்பகுதியில் கைது செய்யப்பட்ட 40,590 பேரில் சுமார் 5,000 பேர் மாத்திரமே தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு நகரில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.டி.வி கமரா பதிவுகளை கொண்டு வீதி சட்டங்களை மீறும் தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் விசேட திட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் முன்னெடுக்கப்படும். அநுராதபுரத்தில் வசிக்கும் ஒருவர் கொழும்புக்கு வருகை தந்த போது அவர் வீதி சட்டத்தை மீறியிருந்தால் அதற்கான நடவடிக்கை அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தின் ஊடாக முன்னெடுக்கப்படும் அதற்கு இந்த சி.சி.ரி.வி பதிவுகள் உரிய பொலிஸ் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்படும் - என்றார். (அ)

## சுதந்திர...

கூறினார்.

உகண்டாவில் இடம்பெற்ற அணிசேரா நாடுகளின் அரச தலைவர்கள் மற்றும் அரசாங்கத்தின் 19ஆவது உச்சி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

ஐக்கிய நாடுகள் சபையின் (ஐ.நா.) தீர்மானங்கள் மற்றும் அணிசேரா இயக்கத்தின் பிரகடனத்துடன் இஸ்ரேல் இணங்கவேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

காசாவின் இன அமைப்பில் எந்த மாற்றமும் இருக்கக்கூடாது. ஐந்து ஆண்டுகளுக்குள் பலஸ்தீன அரசு நிறுவப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி சுட்டிக் காட்டியுள்ளார்.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி முதல் காசா மீதான இஸ்ரேலிய தாக்குதல்களில் இதுவரை 24,620 பேர் கொல்லப்பட்டுள்ளனர் மற்றும் 61,830 பேர் காயமடைந்துள்ளனர் என காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## கோட்டாவின்...

கைதிகளை பார்வையிட நேற்று மட்டக்களப்பு சிறைச்சாலை விஜயம் மேற்கொண்ட போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கையில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மேலும், ரணிலின் கடைசி கனவு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியாக நியமிக்கப்பட வேண்டும் என்பது, இந்த கனவு நிறைவேறுவதற்கான சாத்தியம் குறைவு.

இவ்வளவு காலமும் தமிழ் தலைவர்களே தமிழர்களை ரணில் நல்லவர் என ஏமாற்றியுள்ளனர்.

ரணில் தேர்தலுக்கு முதல் செய்யும் சேவைகளை விடுத்து பின்னர் செயற்படுத்தவுள்ள விடயங்களையே கூறிவருகிறார். இனியும் ரணிலின் நாடகத்தை தமிழ் மக்கள் நம்ப தயார் இல்லை-என்றார். (அ)

## இலங்கை...

மத்திய குழுக் கூட்டம் நடக்கும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தற்போதைய மத்திய குழுவின் கடைசிக் கூட்டம் இது.

எனினும், கட்சியின் பதில் பொதுச் செயலாளரிடமிருந்து, மத்திய குழுக் கூட்டம் இரத்து செய்யப்பட்டுள்ளது என்ற தகவல் அறிவிக்கப்பட்டுள்ளது.

பதில் பொதுச்செயலாளர் பா.சத்தியலிங்கம் நோய்வாய்ப்பட்டுள்ள நிலையில், அவரல் மத்தியகுழு கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாததால், கூட்டம் இரத்து செய்யப்பட்டுள்ளது.

அனைத்து மத்திய குழு உறுப்பினர்களுக்கும் இது அறிவிக்கப்பட்டுள்ளது.

திட்டமிட்டபடி 21ஆம் திகதி பொதுக் குழு கூடி, தலைவர் தெரிவு நடைபெறும் என்பது உறுதியாகியுள் ளது. இதற்காக 5 அல்லது 8 பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்படும். அவர்கள் முன்னிலையில் தலைவர் தெரிவு நடைபெறும். (அ)

## ஒரே சீனா...

சீனத் தூதுவர் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் வழங்கினார்.

மேலும், இரு தரப்பினருக்குமிடையில் கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், 'ஒரே சீனா' கொள்கை தொடர் பில் இலங்கை வழங்கிவரும் ஆதரவுக்கு சீனத் தூதுவர் பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

அரசாங்கம் என்ற வகையில் இலங்கை எப்பொழுதும் 'ஒரே சீனா' கொள்கையை ஏற்றுக்கொண்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன இதன்போது சீனத் தூதுவரிடம் கூறினார்.

அதற்கு மேலதிகமாக, கொழும்பு துறைமுக நகர திட்டம் உள்ளிட்ட இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சீன முதலீட்டு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் இரு தரப்பினருக்குமிடையில் விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் பாராளுமன்ற பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்னவும் கலந்துகொண்டார். (அ)

## இந்தியாவில்...

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

பல்வேறு காலகட்டங்களில் இலங்கையில் ஏற்பட்ட அசாதாரண யுத்த சூழ்நிலைகளின்போது இந்திய மண்ணை நம்பி தஞ்சம் புகுந்த வடக்கு கிழக்கை சேர்ந்தவர்கள் கடந்த 40 வருடங்களுக்கும் மேலாக இந்தியாவின் பல்வேறு முகாம்களில் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் இலங்கைக்குத் திரும்புவதாயினும் வெளிச்செல்லும் பாஸ்கள் மாத்திரமே வழங்கப்பட்டு வந்தன.

இந்த நிலையினை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கவனத்துக்கு கொண்டு சென்ற போது, அவரது வழிகாட்டுதலின்கீழ், இந்தியவாழ் இலங்கை அகதிகளுக்கு உடன் அமலுக்கு வரும்வகையில் இலங்கை அரசின் வரலாற்றில் முதல்தடவையாக சர்வதேச அங்கிகாரமிக்க கடவுச்சீட்டுகள் இன்று வழங்கி வைக்கப்பட்டதாகவும் ஆளுநர் செந்தில் தொண்டமான் கூறினார்.

உலகில் வேறெங்கிலும் இதற்கு முன்னர் இலங்கை அரசால் இவ்வாறானதொரு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவில்லை. சர்வதேச அங்கிகாரம் பெற்ற இலங்கைக் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதனூடாக உலகின் எப்பகுதிக்கும் செல்லும் தகுதியை இந்தியவாழ் இலங்கை அகதிகள் இன்று முதல் பெற்றுக்கொள்கின்றனர்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இக்கடவுச் சீட்டுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு தமது ஒத்துழைப்புகளை வழங்கிய ஜனாதிபதி செயலக அதிகாரிகள், பிரதம மந்திரி செயலக அதிகாரிகள், வெளியுறவுத்துறைச் செயலக அதிகாரிகள், இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் ஷேனுக செனவிரட்ன, சென்னைக்கான இலங்கை உதவி உயர்ஸ்தானிகர் வெங்கடேஸ்வரன் ஆகியோருக்கு வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இக்கோரிக்கையை நிறைவேற்ற பவ வருடகாலமாக அக்கால அரசாங்கங்களிடம் எம்மால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் அவை சாத்தியப்படாதிருந்த நிலையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அனுமதியுடன் இந்த அகதிகளுக்கு அங்கீகாரம் கிடைத்திருப்பதானது சுமார் ஒரு இலட்சம் அகதிகளுக்கும் கிடைத்துள்ள மிகப்பெரிய வரப்பிரசாதமாகும் எனவும் கிழக்கு மாகாண சுட்டிக்காட்டியுள்ளார்.

40 வருடங்களாக தாய் நாட்டை விட்டு வெளியேறியவர்களுக்கு அடைக்கலம் வழங்க உதவிய இந்திய அரசுக்கும் பிரதமர் நரேந்திர மோடிக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன், தமிழகத்திலுள்ள அனைத்து நலன்புரித் திட்டங்களுக்குள் உள்வாங்கி அகதி முகாம் என்ற சொல்லை மாற்றி மறுவாழ்வு நிலையம் என உருவாக்கிய தமிழக முதல்வருக்கும் அமைச்சர் செஞ்சி மஸ்தானுக்கும் நன்றிகளையும் பாராட்டுகளையும் இலங்கை சார்பில் தெரிவிக்கின்றோம்.

மேலும் இந்திய அகதி முகாமில் பிறந்த குழந்தைகளுக்கு குடியுரிமை வழங்குமாறு இரண்டுமுறை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட பாஜக தமிழகத் தலைவர் அண்ணாமலையிடம் கோரிக்கை முன்வைத்ததைத் தொடர்ந்து, இந்திய உள்துறை அமைச்சர் அமத்ஷா, வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோரால் அவ்விடயம் தொடர்பான வேலைத் திட்டங்களுக்கான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதாகவும் ஆளுநர் செந்தில் தொண்டமான் கூறியுள்ளார். (அ)

# கரட் மூட்டை காவலாளிக்கு ஆயிரத்து 500 ரூபா!

கொழும்பு, ஜன. 20

சந்தையில் கரட் விலை பெருமளவில் அதிகரித்துள்ளதன் காரணமாக பொருளாதார மத்திய நிலையங்களுக்கு கொண்டு செல்லப்படும் கரட் மூட்டைகளை பாதுகாக்க காவலாளிகளை ஈடுபடுத்த நேரிட்டுள்ளது.

கரட் மூட்டைகளை காவல் காக்கும் காவலாளி ஒருவருக்கு ஆயிரத்து 500 ரூபாவை செலுத்த வேண்டியுள்ளதாக மரக்கறி வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒரு கிலோ கிராம் கரட் 2 ஆயிரம் ரூபாவுக்கும் மேல் விற்பனை செய்யப்பட்டதுடன் தற்போது அந்த விலையானது ஆயிரத்து 600 வரை குறைந்துள்ளது.

கரட் விலை அதிகரித்துள்ளதன் காரணமாக பொருளாதார மத்திய நிலையங்களுக்கு தினசரி வரும் வர்த்தகர்களின் எண்ணிக்கையும் குறைந்துள்ளதாக கூறப்படுகிறது. (அ)

## வடக்கில்...

செல்வராசா சிந்துஜன் திடீரென மயக்கமடைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது உயிரிழந்தார்.

இதன்போது உயிரிழந்தவருக்கு மேற்கொண்ட பிரேத பரிசோதனையில் டெங்கு தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இதேவேளை, முல்லைத்தீவு மல்லாவிப் பகுதியை சேர்ந்த ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் டெங்கு தொற்றிற்கு தீவிர சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அண்மையில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## முல்லைத்தீவில்...

குறித்த சடலம் தெப்பம் ஒன்றில் மிதந்து வந்த நிலையில் கரை ஒதுங்கி இருக்கின்றது.

இதில் உள்ள கான்களில் இந்தியாவின் தெலுங்கு மொழிகள் எழுதப்பட்ட அடையாளங்கள் காணப்படுகின்றன.

குறித்த சடலம் கரை ஒதுங்கியுள்ளமை தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

பொலிஸார் சடலத்தை மீட்பதற்காக நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்து நீதிபதியை அழைத்து, பரிசோதனையின் பின் சடலத்தை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (அ)

## நாடு...

அதிகரிப்பு, மக்களின் வாழ்க்கைச் செலவுகள் அதிகரிப்பு, தேர்தல்கள் பிற்போடப்படுகின்றமை, கருத்துச் சுதந்திரத்தை பறிக்கும் சட்டமூலங்களை நிறைவேற்றி வருகின்றமை உட்பட பல்வேறு விடயங்களுக்கு எதிர்ப்பை வெளியிடும் வகையிலும் ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் வகையிலும் இந்த பேரணிகள் நடத்தப்பட உள்ளன.

இவ்வருடம் ஒக்ரோபர் 18ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் அண்மையில் அறிவித்திருந்தார்.

இதன் காரணமாக அனைத்துக் கட்சிகளும் கூட்டணிகளை இறுதிப்படுத்துவது மற்றும் பிரசாரங்களை ஆரம்பிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. அதன் பிரகாரம் எதிர்வரும் 30ஆம் திகதியுடன் ஐக்கிய மக்கள் சக்தி அரச எதிர்ப்பு பேரணி என்ற தொனிப் பொருளில் தமது பிரசார நடவடிக்கைகளை ஆரம்பிக்க உள்ளது.

இதேவேளை, தேசிய மக்கள் சக்தியும் நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்களையும், பேரணிகளையும் நடத்தும் நடவடிக்களை ஆரம்பித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## 61 எரிபொருள்...

குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, எரிபொருள் குதங்களை புதுப்பிக்கும் செயற்பாடானது நாட்டின் பொருளாதாரத்திற்கு உதவுமென டிரிங்கோ பெற்றோலியம் டெர்மினல் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் சாலிய விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

அத்துடன், இறக்குமதி செய்யப்படும் மூலப்பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்கான திறன் தங்களிடம் இருப்பதாகவும், இந்த நிலைமையானது பொருளாதாரத்தை மேம்படுத்துவதுடன், செலவைக் குறைக்க உதவும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இலங்கைக்கு களஞ்சிய வசதி தேவையில்லை எனில் சர்வதேச தரப்பினரின் களஞ்சிய தேவைக்காக இடத்தினை குத்தகைக்கு வழங்குகி றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த எரிபொருள் குதங்கள் 1938 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் உள்ள பிரித்தானிய ஸ்தாபனத்தின் ஒரு பகுதியாக காணப்படுகின்றன. நீண்டகாலமாக பராமரிப்பின்றி காணப்படும் குறித்த குதங்கள் புனரமைக்கப்பட வேண்டுமெனவும் சாலிய விக்ரமசூரிய குறிப்பிட்டுள்ளார். (அ)

## இலங்கை பொருளாதார...

அதுவே எமது நம்பிக்கையை மேலும் அதிகப்படுத்தும். ஆனால் எல்லாத் திட்டங்களும் அனைத்து மக்களுக்கும் பயனளிக்கும் வகையில் அமையவேண்டும்.

நியாயமான சுமைப் பகிர்வை உறுதி செய்வது மிக முக்கியமானது.

வரி நிர்வாகத்தை வலுப்படுத்துதல், வரி விலக்குகளை நீக்குதல் மற்றும் சீர்திருத்தங்களை மேலும் நிலையானதாக மாற்றவேண்டும்.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் இலங்கை மத்திய வங்கியின் வெற்றியைக் கட்டியெழுப்புவதுடன், எதிர்கால நாணயக் கொள்கை முடிவுகள் பணவீக்க எதிர்பார்ப்புகளை நன்கு நிலைநிறுத்துவதை மையமாகக் கொண்டே இலங்கையின் விவேகம் அமையவேண்டும்.

கடனை நிலைநிறுத்துவதற்கான பாதையில் இலங்கை அதிகாரிகள் பாராட்டத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளனர்.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பை நிறைவேற்றுவது ஒரு முக்கியமான மைல்கல் என்பதே எமது நிலைப்பாடு. குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கான விஜயம் பற்றி குறிப்பிடவேண்டும்.

இந்த விஜயத்தின் போது எமக்கு சிறந்த ஒத்துழைப்பு கிடைத்திருந்தது. அதற்காக வடக்கு கிழக்கிலுள்ள அதிகாரிகளுக்கு நாம் நன்றி தெரிவிக்க விரும்புகிறோம்.


இந்த விஜயம் இலங்கையின் சவால்கள் மற்றும் சாத்தியக்கூறுகள் பற்றிய குழுவின் புரிதலை அதிகமாக்கியுள்ளது.

நெருக்கடியிலிருந்து முழுமையான பொருளாதார மீட்சிக்கு இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான எமது உறுதிப்பாட்டை நாங்கள் மீண்டும் உறுதிப்படுத்துகின்றோம்" என தெரிவித்தார். (அ)

ஈழநாடு
Eelanadu

# வலுவான பொருளாதார உறவை கட்டியெழுப்ப இந்தியா விருப்பம்

## தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 20

**இந்தியாவும் இலங்கையும் பொருளாதார அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு புதிய பகுதிகளில் ஒருங்கிணைப்புகளை ஆராய்ந்து வருவதாக இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.**

**இந்தியா மற்றும் இலங்கை அரசாங்கங்கள் இரு நாடுகளுக்கும் இடையே டிஜிற்றல், பௌதீக மற்றும் புதுபிக்கத்தக்க எரிசக்தி மற்றும் ஆற்றல் துறைகளில் இணைப்பை மேம்படுத்துவதற்கும் வலுப்படுத்துவதற்கும் தற்போது செயல்பட்டு வருகின்றன.**

டிஜிற்றல் துறையில், இந்திய அரசாங்கம் இலங்கைக்கான பல திட்டங்களைத் தொடங்கியுள்ளது. அதில் பை கட்டண முறையை அறிமுகப்படுத்துதல், பசுமை குடியேற்றங்களை மேம்படுத்துதல் மற்றும் தனித்துவமான டிஜிற்றல் முறைகளை செயல்படுத்துதல் ஆகியவை அடங்கும் என்றும் சந்தோஷ் ஜா கூறியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே தூதுவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த முயற்சிகள் இரு நாடுகளுக்கும் இடையே அதிக டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் பொருளாதார ஒருங்கிணைப்பை வலுப்படுத்தும்.

பொருளாதார மற்றும் வளர்ச்சி இலக்குகளை அடைய புதிய பகுதிகளில் ஒருங்கிணைப்புகளை நாங்கள் ஆராய்ந்து வருகிறோம். இலங்கை அரசாங்கத்துடனும் மக்களுடனும் நெருக்கமாகப் பணியாற்ற வேண்டும் என்ற எங்களின் விருப்பம் கோவிட் தொற்றுநோய் காலத்திலும் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் போதும் அதிகமாக வெளிப்பட்டது.

அந்நியச் செலாவணி ஆதரவை வழங்குவதிலும், இந்தியாவிலிருந்து எரிபொருள், உணவு மற்றும் மருந்து போன்ற முக்கியப் பொருட்களையும் வழங்கி நம்பகமான நண்பராக இந்தியா இலங்கை மக்களுடன் தோளோடு தோள் நின்றது.

இலங்கையின் மிகப் பெரிய வர்த்தகப் பங்காளியாக இந்தியா இருக்கிறது. 2022 ஆம் ஆண்டில், இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகம் சுமார் 6 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது.

சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கு அப்பால் வர்த்தகம் மற்றும் பொருளாதார கூட்டாண்மைகளை மேலும் முன்னேற்ற முற்படும் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் மீதான கலந்துரையாடல்களை இரு அரசாங்கங்களும் அண்மையில் மீண்டும் தொடங்கியுள்ளன. இந்த ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் அது இந்தியா-இலங்கை வர்த்தக கூட்டுறவின் உண்மையான திறனை அடைய உதவும்.

இலங்கைக்கு அதிக முதலீடுகளை வழங்கும் நாடும் இந்தியாதான். உள்கட்டமைப்பு, எரிசக்தி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு துறைகளில் இந்தியா தொடர்ந்து அதிக ஆர்வம் காட்டி வருகிறது.

மேலும், இரு நாடுகளின் பொருளாதாரம் மற்றும் சமூகங்களுக்கு இடையே பாலங்களை உருவாக்க உதவும் மற்றொரு துறை கல்வித் துறையாகும். இலங்கையில் இந்தியப் பல்கலைக்கழகங்களின் வளாகங்களைத் திறப்பது மற்றும் இலங்கை மாணவர்கள் இந்தியாவில் உயர் கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்புகளை ஊக்குவித்தல் ஆகியவையும் தற்போது கவனிக்கப்படும் பகுதிகளாகும்-என்றார். (அ)

# தேர்தல் சட்டத்திருத்தம் குறித்து பேச்சுவார்த்தை

## இலத்திரனியல் வாக்களிப்பு தொடர்பாகவும் ஆராய்வு

கொழும்பு, ஜன. 20

தேர்தல் சட்டத்தில் திருத்தங்களை செய்வதற்கான பரிந்துரைகளை முன்வைக்க நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கும் தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கும் இடையில் மற்றுமொரு பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

இதன்போது தேர்தல் சட்டத்தில் திருத்தங்கள் செய்வதில் காணப்படும் தடைகள் தொடர்பாக தொடர்ந்தும் கருத்துக்களை பரிமாறிக்கொள்வதாக ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலத்திரனியல் வாக்களிப்பு முறை மற்றும் தபால் வாக்குகளை பயன்படுத்தும் வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதில் காணப்படும் நிதி மற்றும் அடிப்படையான தடைகள் பற்றி பேச்சுவார்த்தை நடத்துவது குறித்து முதன்மையான கவனம் செலுத்தப்பட உள்ளது.

இலத்திரனியல் வாக்களிப்பு முறை நடைமுறையில் இருக்கும் இந்தியா, கனடா, பிரித்தானியா, தென் ஆபிரிக்கா போன்ற நாடுகளின் தேர்தல் முறையை ஆராய ஆரம்பித்துள்ளதாக ஆணைக்குழு கூறியுள்ளது.

தேர்தல் சட்டத்திருத்தம் சம்பந்தமாக பொது மக்கள், சிவில் அமைப்புகள் ஆகிய தரப்பில் 50 இற்கும் மேற்பட்ட யோசனைகளை வழங்கப்பட்டுள்ளன.

அவற்றை ஆராயும் நடவடிக்கைகளும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# 30 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் பஸ்ஸில் மீட்பு!

கொழும்பு, ஜன. 20

பயணிகள் பஸ்ஸொன்றில் இருந்து 30 இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளினை மாஹோ பொலிஸார் மீட்டுள்ளனர்.

கொழும்பில் இருந்து அனுராதபுரம் நோக்கி பயணித்த பஸ் ஒன்றை நிறுத்தி நேற்று முன் தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போதே இந்த ஹெரோயின் தொகை மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பஸ்ஸின் சாரதிக்கு அருகில் இருந்த பொதியொன்றை சோதனையிட்ட பொலிஸார் அதிலிருந்து 143 கிராம் ஹெரோயின் போதைப்பொருளை மீட்டனர்.

சம்பவத்தில் பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டதுடன், அவர் 43 வயதான ராங்கனை பகுதியைச் சேர்ந்தவர் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மாஹோ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# வாகன அபராதத் தொகையை இரவில் செலுத்துவதற்கு வசதி

ශ්‍රී ලංකා තැපැල් දෙපාර්තමේන්තුව
இலங்கை அஞ்சல் திணைக்களம்
Department of Posts - Sri Lanka
Sri Lanka POST

கொழும்பு, ஜன. 20

நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் தெரிவு செய்யப்பட்ட தபாலகங்களில் வாகன அபராதத் தொகையை இரவில் செலுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்த தபால் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

தற்போது மேல் மாகாணத்தில் இரவு நேர தபாலகங்களில் அபராதப் பணத்தை செலுத்துவதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருப்பதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த முயற்சி வெற்றியளித்ததையடுத்து, ஏனைய மாகாணங்களிலும் இதே நடவடிக்கைளை முன்னெடுத்துச் செல்ல திட்டமிடப்பட்டுள்ளது.

இம்மாத இறுதிக்கு முன்னர் இதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுமென தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# நாகப்பட்டினம்-காங்கேசன் பயணிகள் கப்பல்சேவை இவ்வாரம் மீள ஆரம்பம்!

கொழும்பு, ஜன. 20

இந்தியாவின் நாகப்பட்டினத்துக்கும் யாழ்ப்பாணத்தில் உள்ள காங்கேசன்துறைக்கும் இடையிலான 'செரியாபாணி' பயணிகள் கப்பல் சேவை இந்த வாரம் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்துரைத்தபோதே, அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

குறித்த சேவையை ஆரம்பிக்க தேவையான ஆரம்பகட்ட பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் ஏற்கனவே காங்கேசன்துறை துறைமுகத்தில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

40 வருட இடைவெளிக்குப் பின்னர் இரு நாடுகளுக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை கடந்த வருடம் ஒக்ரோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

எனினும் பின்னர் அது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

ஒரே நேரத்தில் 150 பயணிகள் இந்த கப்பல் சேவையின் ஊடாக பயணிக்க முடியும்.

இதேவேளை, இந்த வருட இறுதிக்குள் இலத்திரனியல் கடவுச்சீட்டு முறையினை ஆரம்பிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இலத்திரனியல் கடவுச்சீட்டு அறிமுகம் மற்றும் கொள்முதல் தொடர்பான பூர்வாங்க பணிகள் இடம்பெற்று வருவதாக இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்தார். (அ)

# 24 மணி நேரத்தில் 963 பேர் கைது!

கொழும்பு, ஜன. 20

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் விசேட சோதனை நடவடிக்கையின் கீழ், நேற்று அதிகாலையுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் 963 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் போதைப்பொருள் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய 638 பேரும், குற்றப் புலனாய்வு பிரிவினால் அனுப்பப்பட்ட பட்டியலில் உள்ள 325 பேரும் அடங்குவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அவர்களில் 10 பேர் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர். (அ)

# சம்பளம் அதிகரிக்கப்படவேண்டும்!

## இரயில்வே கடவை பாதுகாவலர்கள் கோரிக்கை

கொழும்பு, ஜன. 20

நாடளாவிய ரீதியில் உள்ள இரயில்வே கடவை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தமது நாளாந்த சம்பளத்தை அதிகரிக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாடளாவிய ரீதியில் தற்போது 655 பாதுகாப்பற்ற இரயில் தடவைகளில் 2,065 பாதுகாவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

இதன்படி, எட்டு மணிநேர சேவைக்காக நாளொன்றுக்கு 250 ரூபாய் மாத்திரமே சம்பளமாக வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையிலே, குறித்த சம்பளம் போதாது எனக் கூறி தமது சம்பளத்தை அதிகரிக்குமாறு இரயில்வே கடவை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.01.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



## ஸ்ரீலங்கா கிரிக்கெட்டுடன் இணைந்து செயற்படவுள்ளேனா?

### மறுக்கின்றார் ஜொன்டிரொட்ஸ்

ஸ்ரீலங்கா கிரிக்கெட்டுடன் தான் இணைந்து பணியாற்றவுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகளை தென்னாபிரிக்காவின் முன்னாள் வீரர் ஜொன்டி ரொட்ஸ் மறுத்துள்ளார்.

இலங்கையின் பயிற்றுவிப்பாளர்களிற்கு அவர்களின் திறமையை தகுதியை மேலும் அதிகரிப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட துறைகளில் காலத்திற்கு காலம் பயிற்சிகளை வழங்குவதற்காக உலகின் மிகவும் தலைசிறந்த திறமையாளர்களை நியமிக்கவுள்ளதாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் தெரிவித்துள்ளது.

இதற்காக தென்னாபிரிக்காவின் முன்னாள் வீரர் ஜொன்டிரொட்ஸ் இந்தியாவின் வேகப்பந்து வீச்சு பயிற்றுவிப்பாளர் பாரத்அருண் உட்பட சிலரின் சேவைகளை பெற்றுக்கொள்ள தீர்மானித்துள்ளதாகவும் ஸ்ரீலங்கா கிரிக்கெட் தெரிவித்துள்ளது.

இதற்கு பதிலளித்துள்ள ஜொன்டிரொட்ஸ் இதனை நிராகரித்துள்ளார்.

இது எனக்கு புதிய செய்தி இது குறித்து உண்மையை ஆராயுங்கள் என அவர் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

## பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்குள் குழப்பம்

### பதவிகளை இராஜினாமா செய்த முன்னாள் பயிற்சியாளர்கள்



மிக்கி ஆர்தர், கிராண்ட் பிராட்பர்ன் மற்றும் ஆண்ட்ரூ புட்டிக் ஆகியோர் பாகிஸ்தான் தேசிய கிரிக்கெட் அக்கடமியில் தங்களது பதவிகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

லாகூரில் அமைந்துள்ள பாகிஸ்தான் தேசிய கிரிக்கெட் அகடமியில் பயிற்சியாளர்கள் மூவர் தங்கள் பணியை விட்டு வெளியேறியதாக வியாழன் (18) அன்று பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் கூறியது.

மிக்கி ஆர்தர், கிராண்ட் பிராட்பர்ன் மற்றும் ஆண்ட்ரூ புட்டிக் ஆகியோர் நவம்பர் 2023 வரை பாகிஸ்தான் ஆண்கள் கிரிக்கெட் அணியில் பயிற்சியாளர் பதவிகளை வகித்தனர்.

எனினும், 2023 ஐசிசி ஆடவர் உலகக் கிண்ணத்துக்கு பின்னர், பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் புதிய பயிற்சியாளர் குழுவை அறிமுகப்படுத்தியது, மேலும் ஆர்தர், பிராட்பர்ன் மற்றும் புட்டிக் ஆகியோரை பாகிஸ்தான் தேசிய கிரிக்கெட் அக்கடமியுடன் பணிக்கு மாற்றியது.

2023 ஏப்ரல் மாதம் ஆர்தர் பாகிஸ்தான் கிரிக்கெட் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். முன்பு 2016 முதல் 2019 வரை தலைமை பயிற்சியாளராக பணியாற்றியிருந்தார்.

அதேநேரத்தில் பிராட்பர்ன், புட்டிக் ஆகியோர் முறையே தலைமை பயிற்சியாளர் மற்றும் துடுப்பாட்ட பயிற்சியாளர்களாகவும் நியமிக்கப்பட்டனர்.

இந் நிலையில் மூவரும் 2024 ஜனவரி இறுதிக்குள் குறித்த பதவிகளை விட்டு வெளியேறுவதற்கான முடிவினை அறிவித்ததாக பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் கூறியுள்ளது.

# 9 விக்கெட்களால் இலங்கை வெற்றி

### தொடரையும் கைப்பற்றியது




சிம்பாவே அணிக்கு எதிரான மூன்றாவதும் இறுதியுமான இருபதுக்கு 20 போட்டியில் 9 விக்கெட்களால் வெற்றிபெற்று இலங்கை அணி ரி-20 தொடரையும் கைப்பற்றியுள்ளது.

ஆர்.பிரேமதாச மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத் தடுப்பை தெரிவு செய்தது.

அதன்படி முதலில் களமிறங்கிய சிம்பாவே அணி 14.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 82 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக ஹசார்ங்க 4 விக்கெட்களையும் தீக்ஷண மற்றும் மத்தியூஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் வீழ்த்தினார்.

இதனை தொடந்து 83 ஓட்டங்கள் வெற்றி இலக்கோடு இலங்கை அணி பதிலுக்கு துடுப்பெடுத்தாட களமிறங்கியது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களின் சிறப்பான துடுப்பாட்டம் மூலம் இலங்கை அணி 50 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. இருப்பினும் 7.4 ஆவது ஓவரில் குஷால் மெண்டிஸ் 33 ஓட்டங்களோடு ஆட்டமிழந்து வெளியேறினார்.

தொடந்து சிறப்பாக விளையாடிய இலங்கை அணி 10.5 ஓவர்களில் வெற்றி இலக்கை கடந்தது. இலங்கை அணி சார்பாக பத்தும் நிஸ்ஸங்க ஆட்டமிழக்காமல் 39 ஓட்டங்களையும் தனஞ்சய டி சில்வா ஆட்டமிழக்காத்து 15 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தார்.

இதன் காரணமாக மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 தொடரை இலங்கை அணி 2-1 என கைப்பற்றியது. இதற்கு முன்னர் இடம்பெற்ற ஒருநாள் தொடரை இலங்கை அணி 2-0 என கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தகத்து.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக வணிந்து ஹசரங்க தெரிவு செய்யப்பட்டார். இதேநேரம் தொடரின் நாயகனாக அஞ்சலோ மத்தியூஸ் தெரிவு செய்யப்பட்டார்.

(அ)

# இலங்கை - ஆப்கானிஸ்தான் போட்டி அட்டவணை வெளியீடு




இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடருக்கான போட்டி அட்டவணையை இலங்கை கிரிக்கெட் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி, மூன்று வகை கிரிக்கெட் போட்டிகளிலும் விளையாடுவதற்காக எதிர்வரும் 30ஆம் திகதி இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்கின்றது.

இதில் முதலாவதாக ஒரேயொரு டெஸ்ட் போட்டி, எதிர்வரும் பெப்ரவரி 2ஆம் திகதி கொழும்பு - எஸ்.எஸ்.சி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இதனைத்தொடர்ந்து, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர், பகலிரவு போட்டியாக நடைபெறவுள்ளது. இதன் முதல் போட்டி, எதிர்வரும் பெப்ரவரி 9ஆம் திகதி நடைபெறவுள்ளது. அனைத்து போட்டிகளும் கொழும்பு -ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நடைபெறுகின்றது.

இதனையடுத்து, மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடர், தம்புள்ளை- ரன்கிரி மைதானத்தில் நடைபெறுகின்றது. இதில் முதல் போட்டி, பெப்ரவரி 17ஆம் திகதி நடைபெறுகின்றது.

(அ)

# பதவி விலகத் தயார்!



அணி தன்மீது நம்பிக்கை இழந்தால் தான் பதவி விலகத் தயாராய் இருப்பதாகக் கூறியுள்ளார் பார்சிலோனா உதைபந்துக் குழுவின் பயிற்றுவிப்பாளர் ஸாவி ஹெர்னாண்டஸ்.

சென்ற வாரம் நடைபெற்ற ஸ்பானிய சூப்பர் கிண்ணப் போட்டியின் இறுதியாட்டத்தில் பார்சிலோனா, ரியால் மட்ரிடிடம் 4-1 எனும் கோல் கணக்கில் மோசமாகத் தோல்வியடைந்தது. அதனைத் தொடர்ந்தே ஸாவி இவ்வாறு அறிவித் துள்ளார்.

“எனது விளையாட்டாளர்கள் என் மீது நம்பிக்கை இழக்கும் நாள் வரும்போது நான் பதவி விலகுவேன்,” என்றார் ஸாவி.

இந்தப் பருவம் தற்காப்பு ஆட்டத்தில் பார்சிலோனா பெரிதும் சிரமப்பட்டுள்ளது. லா லீகா லீக்கில் அக்குழு இதுவரை 22 கோல்களை விட்டுக்கொடுத்துவிட்டது. சென்ற பருவம் முழுவதும் 20 கோல்களை மட்டுமே விட்டுக் கொடுத்தது பார்சிலோனா.

பிரச்னைகளைத் தன்னால் சரி செய்ய முடியும் என்று நம்புகிறேன். ஆனால், நிலைமை சீராகாவிட்டால் பதவி விலகவும் தயாராய் இருப்பதாகவும் ஸாவி அணியின் நிர்வாகத்திடம் கூறியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# ஈரானில் சீனா வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் இந்தியா திணறலா?

ஜனவரி முதல் வாரத்தில், மாலத்தீவு அமைச்சர் மரியம் ஷியுனா, பிரதமர் நரேந்திர மோடியை "இஸ்ரேலின் கைப்பாவை" என்று விமர்சித்தபோது, இரு நாடுகளுக்கும் இடையே கசப்புணர்வு அதிகரிக்கத் தொடங்கியது.

இந்தியா-மாலத்தீவு பிரச்னை அதிகரித்ததற்கு லட்சத்தீவின் புகழ்தான் அடிப்படைக் காரணமாக அமைந்தது. இந்தியாவில் உள்ள இஸ்ரேலிய தூதரகம் லட்சத்தீவுகளை பாராட்டி சில படங்களை வெளியிட்டதால் இஸ்ரேல் சர்ச்சையில் சிக்கியது. லட்சத்தீவில் தண்ணீர் சுத்திகரிப்பு திட்டத்தையும் இஸ்ரேல் தொடங்கியுள்ளது.

லட்சத்தீவு விவகாரத்தில் இஸ்ரேல் இந்தியாவை ஆதரிப்பதைக் காணும் அதே நேரத்தில், இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் இஸ்ரேலின் எதிரியாகக் கருதப்படும் ஈரானுக்கு பயணம் மேற்கொண்டார்.

ஜெய்சங்கர் ஜனவரி 15, திங்கட்கிழமையன்று ஈரான் அதிபர் இப்ராஹிம் ரைசி மற்றும் வெளியுறவு அமைச்சர் ஹொசைன் அமீர்-அப்துல்லாஹ்யான் ஆகியோரைச் சந்தித்து பல்வேறு விஷயங்கள் குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

இந்தக் கூட்டத்தில், சபஹர் துறைமுகம் மற்றும் கடலில் கப்பல்கள் மீது சமீபகாலமாக அதிகரித்துள்ள தாக்குதல்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. இந்தச் சந்திப்பில், இந்தியா மற்றும் ஈரான் இடையே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களைச் செயல்படுத்துவது, விரைவுபடுத்துவது குறித்து அதிபர் இப்ராஹிம் ரைசி வலியுறுத்தினார். இந்த ஒப்பந்தங்களில் சபஹர் திட்டமும் சேர்க்கப்பட்டுள்ளது.







இந்தியாவுக்கும் ஈரானுக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களில் ஏற்பட்டுள்ள தாமதத்துக்கு ஈடுகொடுக்க வேண்டிய அவசியம் உள்ளது என்றும் ரைசி கூறினார். இந்தியா ஈரானில் சபஹர் துறைமுகத்தை அபிவிருத்தி செய்து வருகிறது. இந்தத் துறைமுகத்தின் பணி தாமதமாக நடைபெற்று வருவதை ரைசி சுட்டிக்காட்டினார்.

சபஹரை பொறுத்தவரை, திட்டத்தின் தாமதத்தால் ஈரான் இந்தியா விஷயத்தில் மகிழ்ச்சியடையவில்லை என்று கருதப்படுகிறது. இந்தத் திட்டத்தை இந்தியா விரைவில் முடிக்க வேண்டும் என ஈரான் விரும்புகிறது. இந்த விஷயத்தில், சீனா தனது திட்டங்களை விரைவாகச் செயல்படுத்துகிறது. ஆனால் இந்தியா அதைச் செய்ய முடியாத நிலையில், இரு நாடுகளும் ஒப்பிடப்படுகின்றன.

பல வல்லுநர்கள் சீனாவில் பணம் மற்றும் வளங்களுக்குப் பஞ்சமில்லை, எனவே அது அனைத்துப் பணிகளையும் வேகமாக மேற்கொள்கிறது என்று நம்புகிறார்கள்.

### ஜெய்சங்கர் என்ன சொன்னார்?

ஜெய்சங்கர் ஈரானிய வெளியுறவு அமைச்சர் ஹொசைன் அமீர்-அப்துல்லாஹ்யானுடன் இணைந்து தெஹ்ரானில் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தினார். அப்போது பேசிய அவர், "இந்தியாவை சுற்றியுள்ள பகுதிகளில் கப்பல்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் சர்வதேச சமூகத்திற்கு மிகுந்த கவலை அளிக்கிறது. இத்தகைய அச்சுறுத்தல்கள் இந்தியாவின் பொருளாதார நலன்களில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

எந்த நாட்டுக்கும் எந்தப் பலனும் கிடைக்காத பயங்கரமான சூழ்நிலை உள்ளது. சமீபத்தில், இந்தியப் பெருங்கடலில் கடல்சார் வணிகப் போக்குவரத்தின் பாதுகாப்பிற்கான அச்சுறுத்தல்கள் வேகமாக அதிகரித்து வருகின்றன," என்றார்.

சில நாட்களுக்கு முன்பு சவூதி அரேபியாவில் இருந்து இந்தியா வந்த கப்பல் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தியா வந்த டேங்கர் மீது ஈரான் தாக்குதல் நடத்தியதாக அமெரிக்கா கூறியுள்ளது.

செங்கடலில் கப்பல்கள் மீதான தாக்குதல்களும் அதிகரித்துள்ளன. இந்தத் தாக்குதல்களை ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் நடத்தி வருகின்றனர். ஹூத்தி கிளர்ச்சியாளர்களுக்கு ஈரானின் ஆதரவு உள்ளது என்பதுடன் இந்த கிளர்ச்சியாளர்கள் அமெரிக்கா-இஸ்ரேலை எதிர்க்கின்றனர். ஹூத்தி கிளர்ச்சியாளர்களின் சமீபத்திய ஆக்கிரமிப்புக்கு காஸா மீதான இஸ்ரேலின் தாக்குதலே காரணம் என்று கூறப்படுகிறது.

ஜெய்சங்கர், "இந்தியாவை சுற்றியுள்ள பகுதிகளிலும் சில தாக்குதல்களை நாங்கள் பார்த்திருக்கிறோம். இது சர்வதேச சமூகத்திற்கு மிகவும் கவலையளிக்கும் விஷயம். இதன் மூலம் இந்தியாவின் நலன்களும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றன என்பது வெளிப்படை. இதுபோன்ற நிலை யாருக்கும் பயனளிக்காது," என்றார்.

இங்கு ஈரானால் ஆதரிக்கப்படும் ஹூத்தி கிளர்ச்சியாளர்களைப் பற்றி ஜெய்சங்கர் குறிப்பிடுகிறார். இஸ்ரேல்-ஹமாஸ் போரில் பாலத்தீனர்களுக்கு ஈரான் ஆதரவு அளித்து வருகிறது.

பாலத்தீனத்தைப் பற்றி ஜெய்சங்கர் தனது அறிக்கையில் குறிப்பிடுகையில், "பாலத்தீன பிரச்னையில், பாலத்தீன மக்கள் சுதந்திரமான, பாதுகாப்பான எல்லைகளைக் கொண்ட நாட்டில் சுதந்திரமாக வாழக்கூடிய இரு தேசக் கொள்கையை இந்தியா நீண்ட காலமாக ஆதரித்து வருகிறது என்பதை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

அனைத்து தரப்பினரும் ஆத்திரமூட்டும் விதத்தில் செயல்படுவதை விடுத்து பேச்சுவார்த்தை மற்றும் ராஜதந்திர பாதையில் முன்னேற வேண்டியதன் அவசியத்தை நான் வலியுறுத்துகிறேன்," என்றார்.

### ஜெய்சங்கரின் பயணம் ஏன் முக்கியமானது?

பிரிக்ஸ் கூட்டமைப்பில் ஈரானின் உறுப்புரிமை 2023இல் பிரிக்ஸ் நாடுகளின் குழுவால் அங்கீகரிக்கப்பட்டது. பிரிக்ஸ் அமைப்பில் ஈரானை சேர்ப்பதற்கு இந்தியா ஆதரவு தெரிவித்தது. சமீபத்தில், சவூதியில் இருந்து இந்தியா வந்த டேங்கர் மீது ஈரானில் இருந்து ஆளில்லா விமானம் தாக்கியதாக அமெரிக்கா கூறியது. ஆனால் அமெரிக்காவின் கூற்றை ஈரான் நிராகரித்தது.



இதையடுத்து, இந்தியா வந்த டேங்கர் மீது தாக்குதல் நடத்தப்பட்ட விவகாரத்தில் இந்தியாவும் கடும் பதிலடி கொடுத்தது. பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் டிசம்பரில் ஒருமுறை பேசியபோது, "சமீபத்தில் அரபிக் கடலில் எம்வி செம் புளூட்டோ மீது ஆளில்லா விமானம் தாக்குதல் நடத்தியதையும், செங்கடலில் இந்திய கடற்படையின் எம்வி சாய்பாபா மீது நடத்தப்பட்ட தாக்குதலையும், இந்தத் தாக்குதலை நடத்தியது யாராக இருந்தாலும் சரி, இதை இந்தியா தீவிரமாக எடுத்துக்கொள்கிறது," என்று கூறியிருந்தார்.

மேலும் "கடலுக்கு அடியில் இருந்தும் அவர்களைக் கண்டுபிடித்து அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இதை நான் உங்களுக்கு உறுதியாகத் தெரிவிக்க விரும்புகிறேன்," என்றும் கூறியிருந்தார்.




இந்த இரண்டு முக்கிய சம்பவங்களுக்குப் பிறகு, இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஈரான் செல்வது இதுவே முதல் முறை.

இந்த சுற்றுப் பயணத்தின்போது, ஈரான் நேரடியாகத் தலையிடாத கப்பல்கள் மீது ஹூத்தி கிளர்ச்சியாளர்களின் தாக்குதல் மற்றும் இதுபோன்ற பிரச்னைகள் குறித்து ஜெய்சங்கர் பேசினார். சபஹர் துறைமுகம் தொடர்பாக ரைசி கூறியதை இந்தியா நேரடியாக எடுத்துக் கொண்டுள்ளது.

### இப்ராஹிம் ரைசி சொன்னது ஏன் மிகவும் முக்கியமானது?

கடந்த ஆண்டில், பிரதமர் நரேந்திர மோடி மற்றும் ஈரான் அதிபர் ரைசி இடையே பேச்சுவார்த்தை நடந்தபோது, சபஹர் பிரச்னையும் எழுப்பப்பட்டது. 2000ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் இந்தியா, ஈரான், ரஷ்யா ஆகிய நாடுகள் சர்வதேச வடக்கு-தெற்கு வழித்தடத்தை உருவாக்க ஒப்புக்கொண்டன. இதன் மூலம் இந்தியா, ஈரான், ரஷ்யா, மத்திய ஆசியா மற்றும் ஐரோப்பா இடையே வர்த்தகம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஈரானின் கடலோர நகரமான சபஹரில் துறைமுகத்தை மேம்படுத்துவதற்காக இந்தியா மற்றும் ஈரான் இடையே 2003இல் ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தம் 2016இல் அங்கீகரிக்கப்பட்டது என்பதுடன் இந்தியா தற்போது இங்கு சரக்கு முனையத்தை உருவாக்கி வருகிறது.

இந்தத் துறைமுகம் சர்வதேச வடக்கு-


(16ம் பக்கம் பார்க்க)



ஈழநாடு



# 40 வீத வேலைகளை பாதிக்கப்போகும் செயற்கை நுண்ணறிவு - அதிக பாதிப்பு யாருக்கு?




செயற்கை நுண்ணறிவு (ஏஐ) கிட்டத்தட்ட 40 வீத பணிகளை பாதிக்கக்கூடும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் புதிய ஆய்வு கூறுகிறது.

வளர்ச்சியடைந்த பொருளாதாரம் உள்ள நாடுகளில் 60 வீத வேலைகளை செயற்கை நுண்ணறிவு பாதிக்கும் என்று இந்த ஆய்வு கூறுகிறது. இதில் பாதி சந்தர்ப்பங்களில், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மூலம் மனிதர்களின் உற்பத்தித்திறன் மேம்படும்.

ஆனால் மறுபக்கம், ஏற்கனவே மனிதர்களால் செய்யப்படும் சில முக்கியமான வேலைகளைச் செயற்கை நுண்ணறிவு செய்யத்துவங்கும். இது மனித பணியாளர்களுக்கான தேவையைக் குறைக்கும், ஊதியத்தை பாதிக்கும், மேலும் சில வேலைகளை இல்லாமலே செய்துவிடும் என்று இந்த ஆய்வு கூறுகிறது.

அதேசமயம் வளர்ந்துவரும் நாடுகளில் செயற்கை நுண்ணறிவு 26 வீத வேலைகளை பாதிக்கும் என்று இந்த ஆய்வு கூறுகிறது.

### ‘ஏற்றத்தாழ்வுகள் மோசமடையக்கூடும்’

இதனால், ஏற்கனவே இருக்கும் பொதுவான ஏற்றத்தாழ்வுகள் மேலும் மோசமடையும் என்கிறார் சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக இயக்குநர் கிறிஸ்டினா ஜார்ஜியேவா. சட்டம் இயற்றுபவர்கள் இந்த ‘கவலையளிக்கும்’ விஷயத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்றார். இல்லையெனில் சமூகச் சிக்கல்கள் மேலும் மோசமடையும் என்றார்.

“வளர்ந்துவரும் நாடுகள் செயற்கை நுண்ணறிவின் பலன்களை உபயோகித்துக்கொள்ளும் அளவுக்கு உட்கட்டமைப்போ திறன்மிக்க பணியாளர்களோ இல்லை. இதனால் நாடுகளுக்கிடையே ஏற்றத்தாழ்வுகள் அதிகரிக்கக் கூடும்,” என்கிறார் ஜார்ஜியேவா.

இந்த ஆய்வு முடிவுகள், கோல்ட்மன் சாக்ஸ் நிறுவனத்தின் 2023-ஆம் ஆண்டு அறிக்கை முடிவுகளை ஒத்திருக்கிறது. அந்த அறிக்கை, 30 கோடி முழுநேர வேலைகளைக் காலி செய்துவிடும் என்று கூறியிருந்தது. ஆனால், அதற்கேற்றாற்போல் புதிய வேலைகளும் உற்பத்தித்திறன் பெருக்கமும் இருக்கும் என்று கூறியிருந்தது

### யாரெல்லாம் அதிகம் பாதிக்கப்படுவார்கள்?

பொதுவாக அதிக ஊதியம் பெறுபவர்கள், இளைஞர்கள் ஆகியோரின் ஊதியம் செயற்கை நுண்ணறிவினால் மிக அதிகமாக உயரும். ஆனால் குறைந்த ஊதியமுள்ளவர்கள் முதியவர்கள் ஆகியோரின் ஊதியம் குறையலாம் என்கிறது சர்வதேச நாணய நிதியம்.



அனபெல் லியாங்

“இதனால் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களையும், பாதிக்கப்படக்கூடிய பணியாளர்களுக்கு பயிற்சித்திட்டங்களையும் உலகநாடுகள் உருவாக்க வேண்டும்” என்கிறார் ஜார்ஜியா. “அப்படிச் செய்தால் செயற்கை நுண்ணறிவுக்கான மாற்றம் அனைவரையும் உள்ளடக்கியதாகவும், வாழ்வாதாரங்களை பாதுகாப்பதாகவும், எற்றத்தாழ்வுகளை குறைப்பதாகவும் அமையும்,” என்கிறார் ஜார்ஜியேவா.

ஸ்விட்சர்லாந்தின் தாவோஸ் நகரில் நடக்கும் உலகப் பொருளாதார மன்றத்தைப் பொருட்டு சர்வதேச நாணய நிதியத்தின் இந்த அய்வு வெளிவருகிறது. இந்த மன்றத்தில் உலக அரசியல் தலைவர்கள் மற்றும் தொழில்நிறுவனங்களின் தலைவர்கள் பங்கேற்றனர்.

### செயற்கை நுண்ணறிவு பாதுகாப்பு குறித்த சட்டங்கள்

பல நாடுகளும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த சட்டங்களை இயற்றி வருகின்றன. கடந்த மாதம் ஐரோப்பிய யூனியன் அதிகாரிகள் செயற்கை நுண்ணறிவு பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவதற்கான உலகின் முதல் சட்டங்களை முதற்கட்டமாக முடிவுசெய்தனர்.




தேசிய அளவில் செயற்கை நுண்ணறிவுச் சட்டங்களை முதலில் அமுல்படுத்தியது சீனா. இந்தச் சட்டங்கள் அல்காரிதம் எவ்வாறு உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும் என்பதையும் சொல்கிறது.

கடந்த அக்டோபர் மாதம் அமெரிக்க அதிபர் பைடன் மென்பொருள் உருவாக்குபவர்கள் செயற்கை நுண்ணறிவு சார்ந்த பாதுகாப்புத் தரவுகளை அரசாங்கத்துடன் பகிருந்துகொள்ளுமாறு ஒரு நிர்வாக உத்தரவைப் பிறப்பித்தார்.

அதற்கு அடுத்த மாதம், இங்கிலாந்து செயற்கை நுண்ணறிவு பாதுகாப்புக் கூட்டத்தை நடத்தியது. அதில் பல நாடுகளும் பாதுகாப்பான தொழில்நுட்பம் சார்ந்த பிரகடனத்தில் கையெழுத்திட்டன.

### செயற்கை நுண்ணறிவு என்றால் என்ன? அது எவ்வாறு செயல்படுகிறது?

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பமானது ஒரு கணினியை கிட்டத்தட்ட ஒரு மனிதனைப் போலவே செயல்படவும், எதிர்வினை ஆற்றவும் வைக்கிறது. மனிதனைப் போலவே ஒரு விஷயத்தை கணித்து, பிரச்னைகளுக்கு தீர்வு காணும் ஆற்றலை கணினிகளுக்கு செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் அளிக்கிறது.

கணினியைக் கொண்டு ஒரு பணியை முடிப்பதற்காக அவசியம் பின்பற்றப்பட வேண்டிய முறையான விதிமுறைகளின் தொகுப்பையும், தரவுகளையும் செயற்கை நுண்ணறிவு பெரிதும் நம்பியுள்ளது.

அலெக்சா மற்றும் சிரி போன்ற மெய்நிகர் முறையில் செயல்படும் தொழில்நுட்பங்களின் பின்னணியிலும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் உள்ளது. இதனை கொண்டு ஸ்பாட்டிஃபை, யூடியூப் மற்றும் பிபிசி ப்ளேயரில் செயல்பாடுகளை வழிநடத்தலாம்.

அத்துடன் பயனாளர்களுக்கு எந்த பதிவைகளை அளிக்க வேண்டும் என்பது தொடர்பாக ஃபேஸ்புக் மற்றும் ட்விட்டர் போன்ற சமூக வலைதளங்களுக்கும் இத்தொழில்நுட்பம் உதவலாம்.

வாடிக்கையாளர்களின் வாங்கும் பழக்கத்தை பகுப்பாய்வு செய்ய அமேசான் நிறுவனம் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை உபயோகிக்கிறது. அத்துடன் போலி விமர்சனங்களைகளை யாவும் இந்த நவீன தொழில்நுட்பத்தை அமேசான் நிறுவனம் பயன்படுத்தி வருகிறது. ●



# ஈரானில் சீனா வேகத்திற்கு ஈடு கொடுக்க...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

தெற்கு போக்குவரத்து வழித்தடத்திற்கு மிகவும் முக்கியமானது. இந்த வழித்தடத்தின் கீழ், இந்தியா, ஈரான், ஆப்கானிஸ்தான், ஆர்மீனியா, அஜர்பைஜான், ரஷ்யா, மத்திய ஆசியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு இடையே சரக்குகளை கொண்டு செல்வதற்காக 7,200 கி.மீ. நீளமுள்ள கப்பல், ரயில் மற்றும் சாலை வலையமைப்பு உருவாக்கப்பட உள்ளது.

இந்தப் பாதை இந்தியாவின் ஐரோப்பாவுக்கான அணுகலை எளிதாக்குவதுடன் ஈரான் மற்றும் ரஷ்யாவிற்கும் பயனளிக்கும். இந்தத் திட்டத்திற்கு ஈரானின் சபஹர் துறைமுகம் மிகவும் முக்கியமானது. ஆனால், கடந்த ஆண்டு டெல்லியில் நடைபெற்ற ஜி20 மாநாட்டில் புதிய வர்த்தகப் பாதையை உருவாக்க ஒப்புக்கொண்டபோது, இந்த முழுத் திட்டத்தின் எதிர்காலம் குறித்தும் கேள்விகள் எழுப்பப்பட்டன.

இந்தப் புதிய வர்த்தக பாதைக்கு இந்தியா-ஐரோப்பா-மத்திய கிழக்கு வழித்தடம் என்று பெயரிடப்பட்டது. இதில் இந்தியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சவூதி அரேபியா, ஜோர்டான், இஸ்ரேல், கிரேக்கம் ஆகியவை அடங்கும். இந்த வழித்தடத்தில் ஒருமித்த கருத்தை ஏற்படுத்துவதில் அமெரிக்கா முக்கியப் பங்கு வகித்தது.

இந்த வழித்தடத்தின் கட்டுமானத்திற்குப் பிறகு, ஈரானில் சபஹர் துறைமுகம் அதிக முக்கியத்துவம் பெறாது என்று நம்பப்பட்டது. இது ஈரானை புறக்கணிப்பதாகவும் பார்க்கப்பட்டது. பல ஆய்வாளர்கள் இந்த முயற்சியை சீனாவின் ‘பெல்ட் அண்ட் ரோடு ப்ராஜெக்ட்’ மற்றும் ஈரானை தனிமைப்படுத்தும் முயற்சிக்கு எதிராகவும் பார்க்கின்றனர்.

ஈரானின் சபஹர் துறைமுகம் மற்றும் ஐஎன்எஸ்டிசியைவிட இந்தப் புதிய வர்த்தக பாதையில் இந்தியா அதிக ஆர்வம் காட்டக்கூடும் என்றும் நம்பப்பட்டது.

சபஹர், ஐஎன்எஸ்டிசி மற்றும் ஐஎம்இசி ஆகிய நிறுவனங்களில் ஒரே நேரத்தில் முதலீடு செய்வது இந்தியாவுக்கு எளிதாக இருக்காது என்பதும் ஈரானின் அதிகரித்து வரும் கவலைகளுக்குக் காரணம் என்றும் நிபுணர்கள் கூறுகின்றனர். இப்படிப்பட்ட சூழ்நிலையில், ஜெய்சங்கரிடம் இந்தக் கவலைகளை ரைசி தெரிவித்துக் கொண்டிருந்தார்.

### ஈரானுக்கும் இந்தியாவுக்கும் கருத்தியல் வேறுபாடுகள் எழுந்துள்ளனவா?

சபஹரை தவிர, ஈரானுக்கும் இந்தியாவுக்கும் இடையே மற்றொரு பிரச்னை உள்ளது. இந்த விவகாரம் - இரு நாட்டு அரசுகளும் இஸ்லாம் விஷயத்தில் எடுத்த நிலைப்பாடு குறித்தது. மத்தியில் மோடி அரசு முஸ்லிம்களை புறக்கணிப்பதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஆனால், மோடி அரசு இத்தகைய குற்றச்சாட்டுகளை நிராகரித்து வருகிறது.

அதேநேரம் ஈரான் அரசு உலக முஸ்லிம்களின் பாதுகாவலராக தன்னைக் காட்டிக் கொள்கிறது. இந்தியாவில் முஸ்லிம்கள் அதிக அளவில் உள்ளனர். காஷ்மீர் மற்றும் முஸ்லிம்களை கையாள்வது தொடர்பாக இந்திய அரசு பல விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளது.

இருப்பினும், இரு நாடுகளுக்கு இடையே இருதரப்பு பேச்சுவார்த்தை நடைபெறும்போது, இந்திய முஸ்லிம்கள் உடனான உறவுகள் குறித்து குறிப்பிட்ட விவாதம் எதுவும் இல்லை.

ஈரான் ஒரு ஷியா இஸ்லாமிய நாடு என்பதுடன் ஈரானுக்கு அடுத்தபடியாக இந்தியாவில் அதிக எண்ணிக்கையிலான ஷியா முஸ்லிம்கள் உள்ளனர்.

இந்தியா பிரிக்கப்படாமல் இருந்திருந்தால் அதாவது பாகிஸ்தான் உருவாகாமல் இருந்திருந்தால் இந்தியா ஈரானுடன் எல்லையைப் பகிர்ந்திருக்கும்.

### ஈரானின் எதிரி, இந்தியாவின் நண்பனா?

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய இரு நாடுகளுடனும் இந்தியா நெருங்கிய உறவைக் கொண்டுள்ளது. இந்த இரு நாடுகளுடனும் ஈரான் கசப்பான உறவைக் கொண்டுள்ளது.

இது ஈரானுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவில் மாறுபட்ட காரணியாக இருப்பதாகவும், இதனால் இரு நாடுகளுக்கு இடையிலான உறவிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக நிபுணர்கள் கூறுகின்றனர்.

உதாரணமாக, ஈரானிய எண்ணெய் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்தபோது, அது சபஹர் துறைமுகத்தின் வளர்ச்சியில் இந்தியா- ஈரான் ஒத்துழைப்பையும் பாதித்தது.

இருப்பினும், ஈரான் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்தபோது, அதில் சபஹர் திட்டம் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதும் உண்மை. ஆனால், 2018இல் அமெரிக்காவின் பொருளாதார அழுத்தம் காரணமாக, இந்திய நிறுவனங்கள் இந்தத் திட்டத்தில் தயக்கம் காட்டின.

அதன்பிறகு, இந்தியாவின் எந்த குறிப்பிடத்தக்க பங்களிப்பும் இல்லாமல் ஈரான் இந்தத் திட்டத்தில் செயல்பட்டு வருகிறது. மேலும், இந்தத் துறைமுகத்தில் சீன நிறுவனங்களுக்கு வாய்ப்பு வழங்க ஈரானிடம் இருந்தும் சலுகைகள் அளிக்கப்பட்டன.

சபஹர் திட்டம் தொடர்பாக இந்தியா ஏற்கெனவே தனது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தி வருவதாகவும், ஆனால் இந்தத் திட்டத்தில் இந்தியாவின் பங்கு குறைவாக இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

ஈரான்-இந்தியா உறவுகளில் இஸ்ரேலும் முக்கிய பங்கு வகிக்கிறது. இஸ்ரேலுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகளில் ஆழம் காணப்படுவதை ஈரான் புறக்கணிக்க முடியாது என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

கடந்த சில ஆண்டுகளாக, இஸ்ரேலுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் நெருக்கமாகி வருகின்றன. இந்தியா இஸ்ரேலிடம் இருந்து ஏராளமான ஆயுதங்களை, அதாவது சுமார் 42 சதவீத ஆயுதங்களை வாங்கி வருகிறது.

இஸ்ரேலின் நண்பனாக மாறுவதன் மூலம் இந்தியாவும் அமெரிக்காவில் பலன்களைப் பெறுகிறது. அமெரிக்காவும் இஸ்ரேலும் நெருங்கிய நட்பு நாடுகளாக உள்ளன. அதே நேரத்தில், இஸ்ரேலின் செல்வாக்கு அதிகரித்து வருவதைப் பற்றி ஈரான் கவலை கொண்டுள்ளது. இஸ்ரேலின் எல்லையை விரிவுபடுத்தும் ஆபிரகாம் ஒப்பந்தங்களும் இதில் முக்கிய பங்களிப்பாகும்.

கடந்த 2020ஆம் ஆண்டில், அமெரிக்கா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் பஹ்ரைன் ஆகியவற்றின் பேச்சுவார்த்தையுடன் இஸ்ரேலுடன் “ஆபிரகாம் ஒப்பந்தம்” என்ற வரலாற்று ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

இந்த ஒப்பந்தத்தின் கீழ், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் பஹ்ரைன் நாடுகள் இஸ்ரேலுடனான தங்கள் உறவுகளை இயல்பாக்கியது மட்டுமின்றி ராஜ்ஜீய உறவுகளை மீட்டெடுக்கவும் முடிந்தது.

கடந்த 2017ஆம் ஆண்டு பிரதமர் மோடி இஸ்ரேல் சென்றிருந்தபோது, ஈரானின் உச்ச தலைவரான அயதுல்லா அலி கமேனி வாரத்திற்கு இரண்டு முறை காஷ்மீர் பிரச்னையை எழுப்பத் தொடங்கினார்.

காஸா விவகாரத்தில் இஸ்ரேலுக்கு எதிராக ஈரான் உள்ளது. அக்டோபர் 7ஆம் தேதி இஸ்ரேல் மீது ஹமாஸ் தாக்குதல் நடத்தியபோது, அதை பயங்கரவாதத் தாக்குதல் என்று பிரதமர் மோடி கூறினார்.

இருப்பினும், நவம்பர் 2023இல், ஆக்கிரமிக்கப்பட்ட பாலத்தீன பகுதியில் இஸ்ரேலிய குடியேற்றங்களைக் கண்டிக்கும் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் தீர்மானத்திற்கு ஆதரவாக இந்தியா வாக்களித்தது.

